இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-06 | 21-12-2005 | புதன்கிழமை | ஓசை-306

உங்கள் நிறுவனங்களின்
உள்ளக தொலைபேசி
இணைப்புக்களுக்கு...

கிளிநொச்சியில்
அதிக நிறுவனங்களுக்கு
உள்ளகத் தொலைபேசி
இணைப்புக்களை ஏற்படுத்தியவர்கள்.

நொதேன் ரெக்னோலஜி
பிறைவேட் லிமிட்டட்
இல:52, 2ஆம்குறுக்குத்தெரு, வவுனியா.
தொலைபேசி : 024-2221649.
இல: 20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி : 021-2225653(3518)

## சமாதானத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிறிலங்காப்படையினரால் சிதறடிக்கப்பட்டுவிட்டது

### போ.நி.க.குழுவினரிடம் நேற்று இளம்பரிதி வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி. இளம்பரிதி அவர்களுக்கும் யாழ். மாவட்ட போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பாளராகிய யெண், செல்வி.மெத்த அவர்களுக்கும் இடையேயான சந்திப்பு நேற்றுக்காலை 10.30 மணியளவில் பளையில் உள்ள அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது யாழ். மாவட்டத்தில் சிறிலங்காப்படையினரது அத்துமீறல்களால் ஏற்பட்டுவரும் மக்கள் மீதான நெருக்குவாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

-யாழ்.இல். இராணுவத்தின் அராஜகத்தைக் கண்டித்து-

## பாராளுமன்றில் த.தே.கூ. ஆர்ப்பாட்டம்; செயற்பாடுகள் அனைத்தும் முடக்கம்

(கொழும்பு)

தமிழர் தாயகத்திலிருந்து சிறிலங்கா இராணுவம் வெளியேறவேண்டும் என்று வலியுறுத்தி சிறிலங்கா பாராளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தியதால் நேற்று செவ்வாய்க்கிழமை முழுவதும் பாராளுமன்ற நடவடிக்கைகள் முடங்கின. நேற்றுக்காலை பாராளுமன்றம் கூடியதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பேசியதாவது, யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் அமைதியாக ஊர்வலம் சென்றவர்கள் மீது சிறிலங்கா இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் 15-இற்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### - யாழ்.பல்கலை. வளாகத்திற்குள் -

# இராணுவம், பொலிஸ் புகுந்து கண்மூடித்தனமான தாக்குதல்!

## விரிவுரையாளர், மாணவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

*யாழ். பல்கலைக்கழகத்திற்குள் நேற்றுக்காலை வேட்டுக்களைத் தீர்த்தவாறு உள்நுழைந்த சிறிலங்காப் பொலிசாரும் – இராணுவத்தினரும் அங்கு பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசியதுடன், பொல்லுகளைக்கொண்டும் தாக்குதல் நடத்தியதோடு, ஒரு விரிவுரையாளரையும், இரு மாணவர்களையும் கைது செய்துகொண்டு சென்றனர். இதனால் மூன்றாவது நாளாக நேற்றும் பல்கலைக்கழகப் பகுதியில் பதற்றம் நிலவியது.*

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; நேற்றுக்காலை 10.45 மணியளவில் கலட்டிச் சந்திப்பகுதியில் இருந்து முன்னேறிவந்த பொலிசாரும், படையினரும் இணைந்தே இம்மிலேச்சத்தனமான செயலில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு உள்நுழைந்த பொலிசாரும் இராணுவத்தினரும், நேற்று முன்தினம் பல்கலைக்கழகச் சமூகத்தின்மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

- பொலிஸ் - இராணுவ வன்முறைகளைக் கண்டித்து -

## யாழ். பல்கலைக்கழகத்தில் கல்விச்செயற்பாடுகள் இடைநிறுத்தம்

தொடரும் சிறிலங்கா இராணுவ, பொலிஸ் வன்முறையைக் கண்டித்தும், பல்கலைக்கழக சமூகத்தினர் மீது தொடரும் இராணுவ கெடுபிடிகளைக் கண்டித்தும் இயல்புநிலை தோன்றும் வரை கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்படுகின்றது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நேற்று (செவ்வாய்) பொலிசார் பல்கலைக்கழக வளாகத்திற்குள் உள்நுழைந்து துப்பாக்கிகளால் மாணவரை நோக்கி சுட்டுள்ளதுடன் பல்கலைக்கழக சுவர்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இராணுவ உதவியு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீதிமறியலில் ஈடுபட்ட மாணவர்கள் மீது படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்

### - பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி முன்பாக நேற்றுக்காலை வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது சிறிலங்காப்படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தினர். இதில் பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்தனர்.யாழ்.குடாநாட்டில் பொதுமக்கள் மீதும், மாணவர்கள் மீதும் இராணுவம் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்களைக் கண்டித்து யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகே செல்லும் கஸ்தூரியார்... சங்கேசன்துறை வீதியை வழி மறித்து நேற்றுக்காலை 9.30 மணியளவில் மாணவர்கள் வீதிமறிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த கண்காணிப்பு அலுவலகம்முன் யாழ். ஊடகவியலாளர்கள் மறியல்

### - படையினரின் நடவடிக்கையைக் கண்டித்து மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஊடகவியலாளர்கள் நேற்று முற்பகல் 11.10 முதல் யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்கு முன்னால் சுமார் ஒரு மணி நேரம் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் நால்வர் இராணுவத்தினரின் மிலேச்

(12ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.பெருமாள்கோவிலடியில் இராணுவச்சிப்பாய் சுட்டுக்கொலை!

### - நேற்றிரவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பெருமாள் கோவிலடியில் நேற்றிரவு 9.30மணியளவில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கோவில் முன்பாகவுள்ள காவலரணில் நின்றிருந்த சிப்பாய் மீது உந்துருளியில் வந்தோர் நடத்திய துப்பாக்கித்தாக்குதலில் சிப்பாய் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்.

இதனையடுத்து இப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (33)

## ஆட்டோ சாரதிகளின் மீது இராணுவம் கோரமான முறையில் தாக்குதல்

### - பலர் படுகாயம்; ஆட்டோக்கள் நொருக்கப்பட்டன






யாழ்.நகரில் நேற்று மாலை மூன்று மணியளவில் ஆட்டோ சாரதிகள் நடத்திய சாலை மறிப்புப் போராட்டத்தை குழப்பியடிப்பதற்காக இராணுவம் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களால் யாழ்.நகரமே நேற்று மாலை அல்லோலகல்லோலப்பட்டது.

நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இராணுவ அடாவடித்தனங்களுக்கு எதிராக நடத்திய அமைதிப் பேரணியை இராணுவம் குழப்ப எடுத்த காட்டேறித்தனமான தாக்குதலின் போது, இப்பேரணியில் ஒலிபெருக்கி வாகனமாகப் பயன்படுத்தப்பட்ட இரு ஆட்டோக்கள் சின்னாபின்னமாக்கப்பட்டன.

படையினர் ஆட்டோக்களை சின்னாபின்னப் படுத்திய சம்பவத்தைக் கண்டித்து யாழ்.நகர் வின்சர் திரையரங்கச் சந்தியில் ஆட்டோச் சாரதிகள் தமது ஆட்டோக்கள் சகிதம் நேற்று வீதிமறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

எனினும் ஆட்டோக்களின் வீதிமறியல் போராட்டத்தை குழப்பும்நோக்குடன் அங்கு வந்திறங்கிய பெருமளவான இராணுவம் அங்கு நின்ற ஆட்டோக்களை தாக்கி சேதப்படுத்தியதுடன் அவற்றின் உரிமையாளர்கள்,

(12ஆம் பக்கம் பார்க்க)

தென்மராட்சியில் கடையடைப்பும், வீதி மறியலும், யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டின் பின் அங்கு காணப்பட்ட வெற்றுத் தோட்டாக்களும் துளையிடப்பட்ட சுவரும். (படங்கள் : ஆன்சிலின், 41)


வரிவிளம்பரம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Microsoft-Front Page
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
வின்நெற் கணனி பயிற்சி நிலையம்
டிப்போவீதி, கிளிநொச்சி (சி.13074)

கிளி-சீமெந்துக்கல் ஆக்கம்

வேலித்தூண்கள், சீமெந்துக்கல், பூக்கல்வகை, பூச்சாடிகள், அழகுத் தூண்கள் என்பன நியாய விலைக்கு விற்பனைக்கு உண்டு. வைத்திய சாலை பின் ,கிளிநொச்சி. (7154)

இறப்பர் முத்திரை

பொலிமர் இறப்பர் முத்திரை உடன்செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் வாணி புத்தகசாலை (பிக்பென்ஸ்) கனகபுரம் டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி-13264)

காணி,வீடு விற்பனைக்கு

வீடுகாணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. கிணறு 22 அடி விட்டம் தென்னை, பனை மரம் உள்ளது. பிரயோசனமுள்ள காணி இருக்கின்ற காணி ஒன்றரை ஏக்கர் வயல் இரண்டு ஏக்கர் இரு போகஞ் செய்யக்கூடியது. விலை பேசித்தீர்த்துக்கொள்ளலாம். தொடர்பு:- சி.சிறிகாந்தன், 210 ஜெயந்திநகர், கிளிநொச்சி. (7082)

தவறிவிட்டது

புகைப்படம் ஒன்றும் ஜாதகபுத்தகமும் சேர்ந்த சிறியபை ஒன்று 19.12.2005 அன்று சேவியர் கடைக்கும் துயிலும் இல்லத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது சேவியர் கடைச் சந்தியில் அமைந்துள்ள சிற்றுண்டிக் கடையில் கொடுத்து உதவவும். (சி.13611)


# "ஆழிப்பேரலை" ஒலிப்பேழை கிளிநொச்சியில் வெளியீடு

கிளிநொச்சியில் காலநிலை அவதானிப்பு நிலையத்தினை நிறுவியவரும், புலம்பெயர்ந்து இலண்டனில் வசிப்பவருமாகிய கண்ணன் அவர்களின் தனிப்பட்ட




முயற்சியினால் உருவாக்கப்பட்ட ஆழிப்பேரலை என்ற ஒலிப்பேழை நேற்று புலிகளின்குரல் அமலன் அரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

புலிகளின்குரல் வெளியீட்டுப் பிரிவினால் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் புலிகளின் குரல்துணைப்பொறுப்பாளர் செயல்வீரன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்பநிகழ்வாக பொதுச்சுடரினை நவம்அறிவுக்கூட பொறுப்பாளர் கலைக்கோன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை நவம் அறிவுக்கூடஅதிபர் சிவகுமாரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஈகச்சுடரினை போராளி தமிழ்க்கவி ஏற்றிவைத்தார். வரவேற்புரையினை புலிகளின்குரல் இணைப் பாளர் ராஜேஸ்வரன் நிகழ்த்தினார். சிறப்புரையினை புலிகளின்குரல் செய்தியாசிரியர் தி.தவபாலனும், வெளியீட்டுரையினை புலிகளின் குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பனும் நிகழ்த்தினார்கள்.

ஆழிப்பேரலை ஒலிப்பேழையினை செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜெனனி வெளியிட்டு வைக்க, கவிஞரும் எழுத்தாளருமாகிய வேலணையூர் சுரேஸ் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கிவைக்கப்பட்டன. ஒலிப்பேழையில் அடங்கிய விடயங்களை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் விளக்கினார்.

மேற்படி வெளியீட்டுவிழாவில் எழுத்தாளர்கள் துறைசார்ந்த பொறுப்பாளர்கள்,போராளிகள், ஆர்வலர்கள்,பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (கு.தி)

## - தமிழீழக் காவல்துறையின் மகளிர் விவகாரப் பிரிவினரை யூ.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் சந்தித்தனர்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழக் காவல்துறையின் மகளிர் விவகாரப் பிரிவினரை யு.என்.எச்.சி.ஆர். நிறுவன கிளிநொச்சிப் பிரதிநிதிகள் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறையின் நடுவப்பணிகத்தில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு இச்சந்திப்பு இடம்பெற்றது. இதில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவன கிளிநொச்சி வதிவிடப்



பிரதிநிதி கமிலா மற்றும் கேள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு பங்குகொண்ட யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் குடும்பப் பிரச்சினைகள், மற்றும் பிறவன்முறைகள் பற்றியும், இவற்றில் இருந்து பெண்களைப் பாதுகாக்கின்ற வழிமுறைகள் பற்றியும் ஆராய்ந்தனர். அத்துடன் சிறுவர் உரிமைகள் பற்றியும் இவை பற்றி மக்கள் மத்தியில் உள்ள விழிப்புணர்வு என்பவை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட தமிழீழ காவல்துறையின் மகளிர் விவகாரப்பிரிவுப் பொறுப்பாளர் இமாக்குளேற் மற்றும் காவல்துறை ஆய்வாளர் பவானி ஆகியோர் மேற்படி விடயங்கள் தொடர்பாக தமிழீழ காவல்துறை பின்பற்றும் நடைமுறைகள் பற்றி விரிவாக எடுத்துக்கூறினர். (லோ)

## கூட்டங்கள் பிற்போடப்பட்டன

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் நடைபெறவிருந்த அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம், மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் என்பன பிற்போடப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டமும் காலை 11.30 மணிக்கு மாவட்ட விவசாயக் குழுக்கூட்டமும், மீன்பிடி சம்பந்தமான கூட்டமும் நடைபெறவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார். (கு.தி)


இலவச கணனி கற்கை நெறிக்கான விண்ணப்பம்

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் இலவச கணனி கற்கை நெறியின் இரண்டாம் கட்ட கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி பெண்கள் அபிவிருத்திப்புனர்வாழ்வு நிறுவனம் 9ஆம் வட்டாரம், பத்திமாச் சந்தி, புதுக்குடியிருப்பு.

காலம்:- 22.12.2005 - 29.12.2005
குறிப்பு:- 18 - 25 வயதிற்குட்பட்டோர்.

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம்
மாவட்டச் செயலகம்,
புதுக்குடியிருப்பு.

(6966)

# முப்பது ஆண்டுகளுக்குப் பின் கூடிய ஆப்கானிஸ்தான் பாராளுமன்றம்

(காபூல்)

**முப்பதாண்டுகளுக்குப் பின்னர் நேற்று முன்தினம் முதன்முதலாக ஆப்கானிஸ்தான் பாராளுமன்றம் கூடியது.தலிபான் விடுத்த மிரட்டல் களையும் மீறி பலத்த பாதுகாப்புடன் தொடங்கிய பாராளுமன்றத்தின் தொடக்க நிகழ்சியில் அமெரிக்கத் துணை அதிபர் டிக்செனியும் பார்வையாளராகக் கலந்து கொண்டார்.**

ஆப்கானிஸ்தானில் 1973 ஆம்ஆண்டு பதவியில் இருந்து ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தேர்தல் நடக்க வில்லை.1979ஆம்ஆண்டு முதல் சோவியத்யூனியன் கண்காணிப்பில் ஆப்கானிஸ்தான் இருந்தது.அப்போது நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. ஏறக் குறைய பத்து இலட்சம்பேர் கொல்லப்பட்டனர்.கடந்த 1990 ஆம் ஆண்டில் அங்கு புரட்சி ஏற்பட்டது..அதைத் தொடர்ந்து 1997 ஆம்ஆண்டு காபூலை தலிபான்கள் கைப்பற்றினர்.

கடந்த 2001ஆம்ஆண்டு செப் ரெம்பர் மாதம் 11ஆம் திகதி நியூ யோர்க்கில் இருந்த உலக வர்த்தக மையக்கட்டடம் தாக்கப்பட்டது.அதில் சர்வதேசதீவிரவாதியான ஓசாமாபின் லேடனின் அல்-ஹைதா அமைப் புக்கு தொடர்பு இருந்தது தெரிய வந்தது.இதையடுத்து அமெரிக்கா ஆப்கான் மீது தாக்குதல் நடத்தியது. ஆப்கானில் இருந்து தலிபான்கள் ஆட்சி அகற்றப்பட்டது அமெரிக்க அரசின் ஒத்துழைப்புடன் ஹமீத்கர் சாய் தலைமையில் ஆட்சி அமைக் கப்பட்டு.கடந்த2001ஆம்ஆண்டு டிசம் பர்மாதம்21ஆம்திகதிமுதல் செயற் பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இந்தோனேஷியா ஆச்சே போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்தனர்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் சுதந்திர ஆச்சே இயக்கத்தின் ஆயுத ஒப்படைப்பு இறுதிக்கட்ட நடவடிக் கை பூர்த்தி அடைந்துள்ளது. இந் தோனேஷிய அரசாங்கத்திற்கும் சுதந்திர ஆச்சே அமைப்பிற்கும் இடையே கடந்த நான்கு மாதங் களுக்கு முன்னர் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டதை அடுத்து இந்த ஆயுதக் கையளிப்புத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக ஆச்சே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு கூறுகையில்; இறுதி ஆயுத ஒப்படைப்பாக 840 ஆயுதங்கள் நேற்றுப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள தாகக் கூறியுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் நாட்களில் ஆச்சேயில் இருந்து இந்தோனேஷிய இராணு வத்தினர் வாபஸ் பெறப்படவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

சுதந்திர ஆச்சே இயக்கம் கடந்த 30 வருடங்களாக ஆச்சேக்கு சுதந்திரம் வேண்டி போராடி வந்துள்ளது. கடந்த சுனாமி அனர்த் தத்தின் போது ஒரு இலட்சத்து எழுபத் தெட்டாயிரம் மக்கள் பலியாகியோ அல்லது காணாமல் போய்விட்டதை அடுத்து அரசிற்கும் ஆச்சே இயக்கத்திற்கும் பின்லாந்தின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று கடந்த ஓகஸ்ட் மாதம் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டதையடுத்து சமாதானப் பேச் சுக்கள் முடிவிற்கு வந்தன.

# விமானம் கடலுக்குள் வீழ்ந்தது 19 பயணிகளின் உடல்கள் மீட்பு

(மியாமா)

அமெரிக்காவில் ஓஷன் ஏர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான தனியார் விமானம் மியாமி கடற்கரை பகுதியிலுள்ள விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது. பகாமா நாட்டிலுள்ள பிகிமி நகருக்கு சென்று கொண்டிருந்த அந்த விமானத்தில் மூன்று குழந்தைகள் உட்பட 30 இற்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர்.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் அதில் கோளாறு ஏற்பட்டு. விமானம் நடுவானில் வெடித்துச் சித றியது. தீப்பிடித்து எரிந்தபடியே அந்த விமானம் மியாமிப் பகுதியில் கடலில் விழுந்தது.

இதில் விமானத்தில் இருந்த பயணிகள் 19 பேர் பலியாகி விட்டனர். விமானச்சிப்பந்திகள் சிலரும் பலியாகியுள்ளனர். இதுவரை 19 பேரின் உடல்களை கடலோர பாதுகாப்புப் படையினர் மீட்டிருக் கிறார்கள்.

கடலில் மூழ்கி உயிர் பிழைக்க தத்தளிக்கும் பயணி களையும் தேடி வருகின்றார்கள்.

## மலேசியாவிலும் இப்படித்தான்




அண்மையில் பெய்த கடும் மழை மலேசியாவையும் விட்டுவைக்கவில்லை. மலேசியாவில் உள்ள கேட்டா நகரில் கடும்மழை காரணமாக வீதிகளில்வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது .வெள்ளத்தில் சிக்கிய காரை சிலர் தள்ளிக்கொண்டு செல்லும்காட்சி.

## கொலம்பியாவில் எட்டு பொலிசார் சுட்டுக்கொலை

(பெர்கோடா)

கொலம்பியாவில் புரட்சிப் படையினர் எட்டுப்பொலிஸ் அதி காரிகளை சுட்டுக்கொன்றனர். மேலும் 30பேரை கடத்திச் சென்றனர். கொலம்பியா, சோகோ மாகாணத்தில் சான் மாரினோ என்ற சிறிய நகரம் இது பனாமா நாட்டின் எல்லையில் உள்ளது. சான் மாரினோ அதிக மழை பெறும் அடர்ந்த காட்டுப் பகுதியிலுள்ளது இங்கு அரசுக்கு எதிரான புரட்சிப்படையினர் உள்ளனர். இவர்கள் அரசுக்கு எதிராக கடந்த 41 ஆண்டுகளாக ஆயுதம் ஏந்திப் போராடி வரு கின்றனர். இவர்கள் கடந்த 10ஆம் திகதி எட்டுப்பொலிஸ் அதி காரிகளை சுட்டுக்கொன்றனர் மேலும் 30 பேரைக் கடத்திச் சென்றனர். இந்த 30பேரையும் புரட்சிகாரர்கள் துப்பாக்கி முனையில் பிடித்துவைத்துள்ளதாக சிலர் கூறுகின்றனர்.

## அறிமுகம்



ஜப்பானில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள எட்டுச்சக்கரம் கொண்ட எலிகா காரை அந்நாட்டு பிரதமர் யுனிசிரோ கொய்சுமி பார்வையிட்டார்.

# பறவைக்காய்ச்சல் நோய்க்கு இந்தோனேஷிய சிறுவன்பலி

(ஜகார்த்தா)

பறவைக்காய்ச்சல் நோயால் இந்தோஷேியாவில் சிறுவன் ஒருவன் உயிரிழந்ததாக அந்நாட்டின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

புளூ வைரஸ் என்ற கிருமி பறவைகளிலிருந்து மனிதனுக்குப் பரவுகிறது. கோழி போன்ற பறவை இனங்களை உண்பவர்களுக்கு இந்தவைரஸ் பரவி பறவைக் காய்ச்சல் நோய் வருகிறது. கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து பறவைக் காய்ச்சல் நோய்க்கு ஆசியாவில் பலர் பலியாகியுள்ளனர். ஒரு மனி தரிடமிருந்து மற்றொரு மனிதருக்கு இந்த நோய் பரவும் அபாயமும் விரைவில் ஏற்படலாம் என்று மருத்து வர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், இந்தோனேஷியாவில் சிறுவன் ஒருவன் பறவைக்காய்ச்சல் நோயால் இறந்ததாகக் கூறப்படு கிறது. ஆனால் ஹொங்கொங்கில் உள்ள ஆய்வுகூடம் இதை ஆய்வு செய்து உறுதிப்படுத்த வேண்டும். ஏற்கனவே 39 வயதான ஒருவர் பறவைக் காய்ச்சல் நோயால் இறந் துள்ளார். அவரும் பறவைக் காய்ச்சல் நோயால் இறந்தாரா என் பதை ஹொங்கொங் ஆய்வுகூடம் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. இலட்சக்கணக்கான கோழிகள் மற்றும் வாத்துகள் இந்தோனேஷிய கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# கடத்தப்பட்ட அமெரிக்கரை கொன்றுவிட்டதாக தீவிரவாதிகள் அறிவிப்பு

(பாக்தாத்)

இந்த மாதத் தொடக்கத்தில் அமெரிக்காவைச்சேர்ந்த பாதுகாப் புத்துறை அதிகாரியை தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்

ரொனால்டு ஸ்கல்ஸ் என்ற இந்த அதிகாரியை விடுவிக்க வேண்டு மானால் கைது செய்யப்பட்ட அனைத்து ஈராக்கிய கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும். அவர் களுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் இஸ்லாமிய இராணுவம் என்ற தீவிரவாதிகள் கெடு விதித்து இருந்தனர். ஆனால் இந்தக் கோரிக்கையை அமெரிக்கா ஏற்கவில்லை. இதையடுத்து ரொனால்டு ஸ்கல்ஸை தீவிரவாதிகள் தலை துண்டித்து கொன்று விட்ட தாகத் தெரிவித்துள்ளனர். அந்த அமெரிக்க அதிகாரி கொல்லப் படுவதை வீடியோவில் காட்டப்போவ தாகவும் தீவிரவாதிகள் இணையத் தளம் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இது பற்றி அமெரிக் காவும், ஈராக்கும் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

## கொண்டாட்டம் ஆரம்பம்



மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் கிறிஸ்மஸ் கொண் டாட்டம் தொடங்கியுள்ளது.



தென்கொரிய தலைநகர் சியோலின் மருத்துவமனை ஒன்றில் மரணமடைந்த இந்திய மத்திய மின்துறை அமைச்சர் பி.எம். சயீத்தின் உடல் விமானம் மூலம் புதுடில்லிக்கு கொண்டு செல்லப்பட்டபோது.

# குடாநாட்டு மக்கள் மீது இராணுவம் யுத்தப் பிரகடனம் செய்துள்ளது

## -கிளி. மாவட்ட வெ.அ.ஒ.கண்டனம்

(கிளிநொச்சி)

**தமிழ் பேசும் மக்களின் இயல்பு வாழ்வை சிதைத்து அவர்கள் மீதுகட்டற்ற இராணுவ அடாவடித்தனங்களை மேற்கொள்ளும் சம்பவங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. ஒருவகையில் யாழ்ப்பாண மக்கள் மீது சிங்கள இராணுவம் யுத்தப் பிரகடனம் செய்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் தமிழ் தேசம் மீது போர் தொடுப்பதற்கான அரசினுடைய முன் முயற்சிகள் என எண்ணத் தோன்றுகிறது என கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

யாழ்.குடாநாட்டில் படையினர் மேற்கொண்டு வரும் அடாவடித் தனங்களைக் கண்டித்து ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் சிறிலங்கா இராணுவம் தமிழ் மக்கள் மீது பல்வேறு அடாவடித்தனங்களை பிரயோகித்து வருகின்றது. இத்தகைய மிலேச்சத்தனங்களின் உச்சமாக புங்குடுதீவில் இளம் யுவதி கடற் படையினரால் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொடூரமாக கொலை செய்யப் பட்டுள்ளார். இத்தகைய கொலை வெறியாட்டத்தை கண்டித்து அகிம்சை ரீதியில் அமைதி வழியில் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவிடம் மனுவினை சமர்ப்பிக்கச் சென்ற தமிழ் பேசும் மக்களின் உயர் கல்வி சமூகத்தினர் சிங்கள இராணுவத்தின் காடைத்தனமான தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். மதிப்பிற்குரிய துணைவேந்தர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் பலத்த தடியடிக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்காகியுள்ளனர். இச் செயலை கிளிநொச்சி மாவட்ட வெகுசன ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இத்தகைய தருணத்தில் தமிழ் பேசும் மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள எடுக்கும் எத்தகைய மக்கள் போராட்டத்துடனும் இணைந்து போராட நாம் தயாராக உள்ளோம் என்பதை கிளிநொச்சி மாவட்ட வெகுசன ஒன்றியம் தெளிவாக வெளிப் படுத்துகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி கிழக்கில் முன்பள்ளிக் கட்டடம் திறப்பு

(அலுவலகசெய்தியாளர்)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு முற்றாக சேதமடைந்த "சென் அன்ரனிஸ்" முன்பள்ளிக் கட்டடம் மீண்டும் வடமராட்சி கிழக்கில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

வளர்ந்துவரும் மாணவச் செல்வங்களின் வளமான வாழ்வினைக் கருத்திற்கொண்டு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையில், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் வழிநடத்தலின்கீழ் ஐக்கிய




இராச்சிய "கல்குறோ" குறூப் நிறுவன நிதியுதவியுடன், பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் திருமதி .இ.குணலட்சுமி தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பமாகியது.

முன்பள்ளி கட்டடப் பெயர்ப்பலகையினை ஐக்கிய சர்வதேச புனர்வாழ்வுக் கழக தொழில்நுட்ப உத்தியோகத்தர் செல்வராஜசிங்கம் திரைநீக்கம் செய்துவைத்தார். கட்டடத்தினை கல்குறோ குறூப் நிறுவனப் பணிப்பாளர் பகீரதன் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.(கு)

# பூவரசங்குளம் கிராமத்தில் அரசியல் கருத்தரங்கு

(மல்லாவி)

பாண்டியன்குளம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பூவரசங்குளம் கிராமத்தில் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பான கருத்தரங்கும் கிராம அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கும் அண்மையில் இடம்பெற்றது.

பூவரசங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கி. மகேஸ்வரன் தலைமையில் கருத்தரங்குகள் இடம்பெற்றன. நிகழ்வில் இன்றைய அரசியல் நிலவரங்கள் தொடர்பாகவும்



2006 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமான கருத்துரைகளை பாண்டியன்குளம் துணுக்காய்ப்பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் செ. முல்லைவீரன் பாண்டியன்குளம் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் சி.இலக்கியன் தமிழீழ நிர்வாக சேவை முல்லைக் கிளைச் செயலகப் பொறுப்பாளர் சி.தமிழ்பிறை, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.ரவிகரன் ஆகியோர் வழங்கினர்.(24)

# 15 ஆம் ஆண்டு நிறைவு விழா

கிளிநொச்சி மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை நடைபெறவுள்ளது.

மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வு சங்கத்தால் மார்கழி மாதம் மூன்றாம் திகதி சர்வதேச மாற்றீடான வலுவுள்ளோர் தினத்தையும் 15ஆவது ஆண்டு விழாவையும் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தபோதும் காலநிலை சீரின்மையால் பிற்போடப்பட்டு நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வு காலை பத்து மணிக்கு கிளி/ மாற்றீடான புனர்வாழ்வுச் சங்க தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (கு)

# பயன்படுத்த முடியாத நிலையில் வடமராட்சி கிழக்கு வீதிகள்

## -பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சி கிழக்குப் பகுதி வீதிகளில் முற்றாக பயணிக்க முடியாதுள்ளதாகவும் இதனால் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுனாமியின் பின்பு கரையோர வீதிகள் முற்றாக அரிக்கப்பட்டு பயன்படுத்த முடியாமல் இருந்தது. தொடர்ந்து சில தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இப் பகுதிகளில் சிலவீதிகள் சீர்செய்யப்பட்டு மக்கள் பயணிக்கக் கூடிய வாறு வீதிகள் அமைக்கப்பட்டு வந்தன.

அண்மையில் பெய்த கன மழையினால்செம்பியன்பற்று தொடக்கம் கட்டைக்காடு வரையிலான வீதிகள் மழை வெள்ளத்தினால் அரிக்கப்பட்டு வீதிகளின் குறுக்காக பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளது. இதனால் வீதிகளிலுள்ள குழிகளில் மழை நீர் தேங்கி நிற்கின்றது பாடசாலை மாணவர்கள், நீண்டதூரம் பயணிக்கும் பயணிகள், நோயாளர்கள் எனப்பலரும் இவ்வீதிகளால் பயணிக்க முடியாது பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் இப்பகுதிகளில் பேருந்தின் வருகையும் குறைவாக உள்ளது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (தீ.லோ)





# யோகபுரம் மத்தி கிராமத்தில் 35 விவசாயிகளுக்கு உதவி

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட யோகபுரம் மத்தி கிராமத்தில் 35 விவசாயிகளுக்கு விவசாயச்செய்கைக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக பங்காளி நிறுவனமான பாண்டியன் குளம் துணுக்காய் அபிவிருத்தி கழகத்தினரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

தெளிகருவிகள், விவசாய உள்ளீடுகள், பழமரக்கன்றுகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கமக்கார அமைப்பினர், கிராம சேவையாளர், சமூக பொருளாதார குழுவினர், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (24)



கழிவு நீர் வடிந்து செல்லும் வகையில் வீ யோரங்களில் வடிகால்கள் வெட்டப்பட்டு வருகின்றன. திருநகர் வீதியே மாக வடிகால்கள் வெட்டும் நடவடிக்கையினை பாரிய இயந்திரம் ெ ண்டு மேற்கொள்வதனை படத்தில் காணலாம். (படம்: சோதி)

# எயிட்ஸ் விழிப்புணர்வு

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒன்றுகூடல் மண்டபத்தில்அண்மையில் புதுக்குடியிருப்பு பொதுசுகாதாரபரிசோதகர் மு.இராஜ்குமார், முல்லைத்தீவு மாவட்ட சுகாதார கல்வி உத்தியோகத்தர் செல்வி வி.சிவக்குமாரி ஆகியோர் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்க்ள், கிராம சேவையாளர்கள், பிரதேச சபைஉத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (08)

# உணவு கையாள்பவர்களுக்கு அடையாள அட்டை வழங்கல்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பொதுசுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட உணவகங்களில் பணிபுரியும் உணவு கையாள்பவர்களுக்கான மருத்துவ பரிசோதனையும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வும் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒன்றுகூடல் மண்டபத்தில் கடந்த 16 ஆம் 17ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு பொது சுகாதார பரிசோதகர் மு.இராஜ்குமார் தலமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய தொற்றுநோயியலாளர் வைத்தியகலாநிதி சு.சுதர்சன், வைத்தியகலாநிதி பி.சுரேஸ், முல்லைத்தீவு பதில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் க.தவராஜா, மாங்குளம் பொ.சு.ப ஜெ.ஜெயனிகாந், விசுவமடு பொ.சு.ப இரா.சௌமியமூர்த்தி, முல்லைத்தீவு பொ.சு.ப இரா.குணராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் உணவு கையாள்பவர்கள், உரிமையாளர் களுக்கான நடைமுறைகள் உணவகங்களின் தற்போதைய நிலைமைகள் தனி உடல் நல சுகாதாரம், நெருப்புக் காய்ச்சலுக்கான தடுப்பூசி மற்றும் பல விடயங்கள் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொ.சு.ப மு.இராஜ்குமார், மாங்குளம் பொ.சு.ப ஜெ.ஜெயனிகாந் ஆகியோர் அறிவுறுத்தல்களை வழங்கினர். (08)

# தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் நிறுத்தப்படாத வரை அமைதிப் பேச்சுக்களும் நடைபெறப் போவதில்லை

## - பாராளுமன்றில் மாவை சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா இராணுவத்தின் வன்முறைகள் நிறுத்தப்படாத வரை இலங்கையில் அமைதிப் பேச்சுக்களும் நடைபெறப் போவதில்லை என்று தமிழ்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா எச்சரிக்கை விடுத்துள்ளார்.சிறிலங்கா பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு- செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் மாவை சேனாதிராசா பேசியதாவது;**

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டின் முன்பாகவும் இராணுவம் நிற்பதால் மக்கள் அச்சத்துடன் வாழ்க்கை நடத்த வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனை இராணுவம் தாக்கியுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக் கழகத் துணைவேந்தர் உள்ளிட்ட கல்வியாளர்களையும் இராணுவம் தாக்கியுள்ளது.

இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பல மாணவர்கள் படுகாய மடைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் இராணுவ வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனே தலையிட வேண்டும். யாழ்ப்பாணத்தை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து நிற்பதற்கு மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

யாழ்.புங்குடுதீவில் சிறிலங்கா கடற் படையினர் இளம் பெண்ணை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி கொடூரமாக படுகொலை செய்துள்ளனர். இந்த அநீதிக்கு எதிராக கடற்படை முகாம் முன்பு தமிழ் மக்கள் போராட் டம் நடத்தினர். இதற்கு பழிவாங்க படுகொலை செய்யப்பட்ட இளம் பெண்ணின் இறுதி நிகழ்வில் பங்கேற்றவர்கள் மீது சிறிலங்காக் கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளது.

புங்குடுதீவின் பதற்ற நிலைமைகளைப் பார்வையிட பாராளுமன்றஉறுப்பினர் செ.கஜேந் திரனுக்கு அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் சித்திர வதைகளாலும் ஒடுக்குமுறைகளாலும் தமிழ் மக்கள் கட்டாய ஆயுதப் பயிற்சி பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கிருசாந்தி தொடங்கி இன்று தர்சினி வரையில் அரசபடைகளால் பல இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொடூர மாக கொல்லப்பட்டு வருகின்றனர். ஆகையால் தான் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து சிறி லங்கா இராணுவம் உடனே வெளியேற வேண்டும் என்று தமிழ் மக்கள் வலியுறுத்து கின்றனர்.

இராணுவ ஆக்கிரமிப்பால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்வுக்குள்ளாகி இன்னமும் நலன்புரி மையங்களிலும் அகதி முகாம்களிலும் துயரமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சிறிலங்கா இராணுவம் அந்த மக்களினது வீடுகளையும் விவசாய நிலங்களையும் ஆக்கிரமித்துள்ளதால் அந்த மக்கள் இன்னமும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையே உள்ளது.

தமிழ் மக்களின் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாத வரை தமிழ்த் தரப்பினர் அமைதிப் பேச்சுக்களில் பங்கேற்பதை சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது.

தமிழ் மக்களின் மீதான இந்த ஒடுக்கு முறைகளை முதலில் சிறிலங்கா அரசாங்கம் நிறுத்த வேண்டும். அதன் பின்னர் அமைதிப் பேச்சுக்களை நடத்தலாம் என்றார் மாவை சேனாதிராசா.

# இராணுவ கொடுமைகளை பொறுக்கத் தயாரில்லை

யாழ்ப்பாணக்குடாநாட்டில் கூலிப் படைகளோடு கைகோர்த்து சிங்கள பேரினவாத வெறியர்களின் பட்டாளங்கள் மீண்டும் மீண்டும் புரிகின்ற கொடுமைகளை இனியும் பொறுக்க முடியாது என உணர்வோடு வாழ நினைக்கும் யாழ் குடாநாட்டில் இராணுவக்கூலிப்படையின் அக்கிரமங்களுக்கு எதிராக பொங்கி எழும் மக்கள் படையோடு சேர்ந்து கொள்ளும் யாழ்ப் பாண மங்கையர்கள் அறிக்கை விடுத்துள்ளார்கள் அவ்வறிக்கையில்; கிருசாந்தி பட்டியலில் புங்குடுதீவில் இளம் பெண் மீது மிகமோசமான பாலியல் வல்லுறவுக்கொலை தொடர்கின்றது. இராணுவ வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு எமது மண்ணை ஆக்கிரமித்து விட்டு எம் மக்கள் மீது புரிகின்ற கொடூரங்களை சர்வதேச சமூகமே கண் திறந்து பார்! ஆயுதமில்லாத அப்பாவி மக்களைத்தாக்கி அவர்களின் உணர்வுகளை அழிக்க நினைப் பதை உடனே நிறுத்து! புங்குடுதீவில் கொலை செய்யப்பட்ட இளம்யுவதி மிகவும் மோசமாக பாலியல் இம் சைக்கு உள்ளாக்கப்பட்டு மோச மான முறை யில் கொல்லப்பட்டுள்ளார். இதை யும் கண்டு இன்னும் நாம் மௌனிகளாக இருக்கமுடியாது.

போராடத் திராணியில்லாத காடையர்கள் எமது பெண் களின் கற்பைச்சூறையாடி கொலை செய்யத் துணிந்து விட்டார்கள். இவர்களுக்கெதிராக நாம் கிளர்ந்தெழுவதற்கான ஆணையை எதிர்பார் த்துக் காத்திருக்கின்றோம். சர்வதேசத்தின் கைகளில் எம்மை ஒப்படைத்து தொடர்ந்தும் அடிபணிந்து வாழ எம்மால் முடியாது.

எமது சொந்த இடங்களில் நாம் வாழ, நடமாட முடியாதென்றால் எமக்கேன் யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை! இவை எவையுமே எமக்குத் தேவையில்லை. சுதந்திரமான பூமிக் காக நாம் எவரையும் எதிர்த்துப் போராடத் துணிந்து விட்டோம். பெண்கள் மீது கொடூரமான வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ள இராணுவத்தை இனிமேல் அகற்றாமல் இருக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அச்சுறுத்தி அடிபணிய வைத்ததன் மூலம் உண்மைகளை மூடி மறைக்க முடியாது

## - வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் அறிக்கை

தமிழ் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் தாக்கியும் அச்சுறுத்தியும் அடிபணிய வைப் பதன் மூலம் உண்மைகளை மூடி மறைத்து விடலாமென்ற இலங்கை அரசினதும் அதன் படைகளினதும் எண்ணம் மீண்டுமொருமுறை யாழில் நேற்று முன்தினம் அரங்கேறியுள்ளது என வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. அதில் மேலும் பல்கலைக்கழக மாணவர் களால் அகிம்சை ரீதியில் முன் னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பாக செய்தி சேகரிக்கச்சென்ற நான்கு இளம் செய்தியாளர்கள் படையினரால் கண்மூடித்தனமாக நேற்று முன் தினம் பரமேஸ்வரா சந்தியில் வைத்து தாக்கப்பட்டுள்ளனர். தினகரனின் யாழ்.செய்தியாளர் வின்சன் ஜெயன், யாழ்.தினக்குரல் அலுவலக செய்தி யாளர் ஆ.சபேஸ்வரன், உதயன் அலுவலக செய்தியாளர் எஸ்.பிரதீபன் நமது ஈழநாடு அலுவலக செய்தி யாளர் ஜெ.ஜெராட் ஆகியோர் மோசமாகத்தாக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று ஈழநாதம் பத்திரிகை யின் யாழ்.செய்தியாளர் ஆன்சிலினும் மோசமாகத்தாக்கப்பட்டதுடன் ஊடக வியலாளர்களது தொழில் உபகர ணங்களும் தாக்கி சேதமாக்கப்பட் டுள்ளன.

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும், ஊடக நிறுவனங்கள் மீதுமான தாக்குதல்களை நிறுத்துமாறு நாம் பல தடவைகள் கோரிவந்துள்ள போதும் அவை எதுவுமே வெற்றி யளித்திருக்கவில்லை. யாழிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் இதே கதை தொடர்கின்றது.

இந்த வகையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் மீது மேற் கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலை வன்மையாக எமது சங்கம் கண்டிக்கின்றது.

அத்துடன் தமிழ் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் அரசினாலும் அவர்களது படை களாலும் துணைக்குழுக்களாலும் நடாத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் மற்றும் கொலைகளைத் தடுத்து நிறுத்த முன்வருவதுடன் உண்மை நிலைமையினை சர்வதேச சமூகத் திற்கு வெளிக்கொணர நடவடிக்கை எடுக்குமாறு போர்நிறுத்த கண் காணிப்புக்குழுவை நாம் இவ்வேளை யில் பகிரங்கமாக வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பழைய முறிகண்டிக்கிராமத்திலுள்ள பொதுக்கிணறு உப்புநீராக உள்ளது. இதனால் அந்த நீரை மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். (படம்: அன்ரனி)




துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட துணுக்காய் உப அஞ்சல் அலுவலகம் முன்பு சந்திரசேகரப் பிள்ளையார் வீதியில் இயங்கியபோது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர் தற்போது இவ் உப அஞ்சல் அலுவலகம் கடந்த 05.12.2005 அன்று தொடக்கம் துணுக்காய் பிரதான சாலையில் அமைந்துள்ள கிராம அபிவிருத்தி சங்க மண்டப கட்டடத்தில் இயங்கி வருவதால் மக்கள் அதன் சேவையை சிரமமின்றிப் பெற்று வருகின்றனர். (படம்: அன்ரனி)

# இராணுவ பிரசன்னத்தை நீக்கி கற்றல் செயற்பாட்டிற்கு வழிவிடுக

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தினை சுற்றியுள்ள இராணுவ பிரசன்னத்தை அகற்றி எமது மாணவர்களின் சுதந்திரமான கற்றல் செயற்பாட்டிற்கு வழிவகுக்குமாறும் எமது இம்முடிவினை உதாசீனம் செய்யாது உடன் நிலைநிறுத்துமாறும் இல்லையேல் நாம் சட்டத்தினை கையில் எடுக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை அரசிற்கும் எமது ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் எமது வாழ்வில் மாற்றம் வரும் என எண்ணியிருந்தோம். எனினும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் எமது வாழ்வில் இயல்நிலை தோன்றவும் இல்லை. இடம்பெயர்ந்த மக்கள் தம் சொந்த இடங்களிற்கு திரும்பவும் இல்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி மக்கள் வாழ்விடத்தில் இருந்தும், பாடசாலைகளில் இருந்தும், வணக்கத் தலங்களில் இருந்தும் இராணுவம் வெளியேறவும் இல்லை. மாறாக உயர் பாதுகாப்பு வலயம், பாதுகாப்பு வலயம், இராணுவக்காவல் அரண்கள் என எமது வாழ்விடங்கள் பறிக்கப்பட்டு இராணுவ அழுத்தங்கள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

நாம் சமாதான வழியில் அகிம்சை ரீதியாக அனைத்தும் சொல்லிக்களைத்து விட்டோம்.ஆனால் மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த அரசுகளோ எந்தவொரு நல்ல மாற்றத்தினையும் எமக்குத் தரவில்லை. மாறாக தமிழ் மக்கள் வாழ்வில் மாறாத வடுக்களையே தந்த வண்ணமுள்ளனர்.


இன்று எல்லாவற்றையும் கடந்து பல்கலைக்கழக மாணவர்கள் ஆகிய எம்மீதும், விரிவுரையாளர்கள் மீதும், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மீதும் இராணுவம் தனது அராஜகப்போக்கினை கட்டவிழ்த்து விட்டுள்ளமையானது கடும் இராணுவப் போக்குடைய புதிய இராணுவத்தளபதியின் கட்டளைப்படியே நடந்து வருகின்றது என தென்படுகின்றது. தொடரும் சுற்றிவளைப்புக்கள், கைதுகள், மக்களையும், மாணவர்களையும் வீதிகளில் பொல்லுகளாலும், துப்பாக்கி மூலம் தாக்குதல், தமிழ்ப் பெண்களைக் கோரமாக படுகொலை செய்தல் என இராணுவக்கடும் போக்கானது கடைப்பிடிக்கப்படுகின்றது. இவையாவும் இராணு வத்தினரால் யுத்த நிறுத்த ஒப்பந்தச்சரத்துக்களினை மீறிச் செய்யப்படுகின்றன.இவை மிகவும் மோசமான சூழலை உருவாக்கும் என நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேலும் கடந்த சில நாட்களாக எமது பல்கலைக் கழக எல்லையைச்சுற்றிய பகுதிகளில் பல்கலைக்கழக மாணவர்கள் இராணுவத்தினரால் வன்மையாகத்தாக் கப்பட்டுள்ளதுடன் அவர்களின் அடையாள அட்டை களைக் கிழித்தும் எறிந்துள்ளனர்.

குறிப்பாக பல்கலைக்கழகத்தினைச் சுற்றிய பகுதியில் இருந்து உடனடியாக இராணுவப் பிரசன் னத்தை அகற்றி எமது மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு வழிவகுக்குமாறும், மாணவர்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள் மாணவர்களின் தங்குமிடத்தினைச் சுற்றிவளைத்துச்சோதனை செய்தல், மாணவர் அடையாள அட்டையைக் கிழித்தெறிதல், பாடசாலைப்பகுதிகளில் காவல்அரண் அமைத்தல் போன்ற செயற்பாட்டினை நிறுத்தி மாணவரதும் மக்களினதும் சுதந்திரமான வாழ்வுரிமையை உடன் நிலை நிறுத்துமாறும் வேண்டிக்கொள்கின்றோம்.

எமது இம் முடிவினை உடன் நடைமுறைப் படுத்துமாறு கூறி நிற்கின்றோம் எமது தீர்க்கமான முடிவு உதாசீனம் செய்யப்படுமானால் நாம் சட்டத்தினைக் கையில் எடுக்கும் துர்ப்பாக்கியநிலை உருவாகும் என மன வேதனையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# பலவீனமான சமாதான முயற்சிகளும் வலுவான யுத்த முன்னெடுப்புக்களும்!



**சிறிலங்கா** சனாதிபதி மகிந்தராஜ பக்ஷ தலைமையிலான அரசாங்கம் பேச்சு வார்த்தைகள் தொடர்பான சில அறிவிப்புக்களை விடுத்துள்ள அதேவேளை இராணுவ ரீதியிலான தீர்விற்கான நகர்வுகளிலும் முனைப்புக்காட்டி வருகின்றது. இதில் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசின் நிலைப்பாடு/முயற்சி என்பன பலவீனமானதாக இருக்கையில் இராணுவ ரீதியிலான முயற்சிகள் தீவிரமானதாகவும் / உறுதியானதாகவும் உள்ளது.

நோர்வே அரசாங்கத்தை அனுசரணையாளர்களாகப் பணியாற்ற சிறிலங்கா அரசாங்கம் அழைத்திருக்கலாம். அதேசமயம் விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்ததிருத்தம் பற்றிப் பேசுவதற்குத்தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கலாம். ஆனால் பேச்சுவார்த்தை முயற்சிகளில் முன்னேற்றம் ஏதும் ஏற்படுவதற்கான சமிக்ஞைகள் எவையும் தென்பட்டுள்ளனவா? என்பதே கேள்வியாகும்.

முதலில் சமாதான முயற்சிகளில் ஏற்பாட்டாளர்களாகப் பணியாற்றும் நோர்வேத்தரப்பு சிறிலங்கா ஆட்சியாளர்களின் அழைப்பிற்குக் காத்திருந்ததுபோன்று அழைத்ததும் ஓடிவந்து சமாதான முயற்சிகளில் பங்காற்றுவதற்குத் தயாராக இல்லை. சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அது பணியாற்ற முடியும் எனக் கூறிவிட்டது.

ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்கள் ஒரு அரசு மீது நிபந்தனைகளை விதிப்பதா? அது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது எனத் தெரிவித்துள்ளதோடு, நிபந்தனை குறித்துப் பேசிய நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சரும் இனப்பிரச்சினை விடயத்தில் விசேடதூதுவராகப் பணியாற்றியவருமான எரிக்சூல்ஹெய்ம் அவர்களை இவ்விடயத்தில் இருந்து ஓரம் கட்டும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

எரிக்சூல்ஹெய்மை இவ்விவகாரத்தில் இருந்து ஓரம் தள்ள சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் முதல் முயற்சி அல்ல. இது முன்னாள் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டார். இதனால் சமாதான முயற்சிகள் பலமாதங்கள் கிடப்பில் போடப்பட்டிருந்தன.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் எரிக்சூல்ஹெய்மை வெளியேற்றும் முயற்சியும், நோர்வேயின் நிபந்தனைகள் ஏற்பதற்கில்லை என்ற நிலைப்பாடும், நோர்வே சமாதான ஏற்பாட்டாளராக அழைக்கப் பட்டாலும் நோர்வே பணியாற்ற ஏதுவான சூழ் நிலை ஒன்றைத் தோற்றுவிக்கவில்லை என்றே கூறவேண்டும். அவ்வாறானதொரு சூழ்நிலை உருவாகியிருக்குமானால், சிறிலங்கா அரசின் அழைப்பை ஏற்று நோர்வேக்குழு ஒன்று இதுவரையில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும். குறிப்பாக நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் ஏற்கனவே திட்டமிட்டு ஒத்திபோடப்பட்ட தனது விஜயத்தையாவது மேற்கொண்டிருப்பார். தொடர்ந்து ஒத்திவைத்துக் கொண்டிருக்கமாட்டார்.

நோர்வேயின் பங்களிப்புத் தொடர்பான நிலை இவ்வாறு இருக்கையில், விடுதலைப்புலிகளுக்குப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசாங்கம் விடுத்துள்ள அழைப்புடன் பின்னிணைப்பு ஒன்றை இணைத்தது போன்று இரு நிபந்தனைகளையும் அது சேர்த்துள்ளது அவை.

1. ஆசிய நாடுகளிலேயே பேச்சுவார்த்தை

2.யுத்தநிறுத்த உடன்பாட்டுத்திருத்தம் குறித்து முதலில் பேச்சுவார்த்தை என்பனவாகும்.

ஆனால், விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்தாகியதற்கு முன்பிருந்தே ஒரு விடயத்தைத் தெளிவாகவும், உறுதியாகவும் கூறிவந்ததோடு, அதனையே கடைப்பிடித்தும் வந்துள்ளனர். அதாவது நிபந்தனையுடன் கூடிய எந்தப்பேச்சுவார்த்தைக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் எப்பொழுதுமே தயாராக இல்லை என்பதே அது.

ஆகையினால் பேச்சுவார்த்தைகளை ஆசியாவிலேயே நடத்துவது, யுத்தநிறுத்த உடன்பாடு திருத்தம் பற்றியேமுதலில் பேச்சு என்பவை போன்றவை எல்லாம் புலிகளின் அடிப்படை நிலைப்பாட்டிற்கு மாறானவையாகும். இது தவிர இவ்விரு விடயங்களும் ஏற்கனவே, விடுதலைப்புலிகளினால் நிராகரிக்கப்பட்டவையாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதாவது ஆசிய நாடுகளில் பேச்சுவார்த்தைகளை நடத்துவது என்பதை விடுதலைப்புலிகள் ஏற்கனவே நிராகரித்திருந்தனர். ஐரோப்பாவிலோ அன்றி சமாதான ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வேயிலோ மீண்டும் பேச்சுக்களை நடத்தலாம் என விடுதலைப்புலிகள் ஏற்கனவே நோர்வேத்தரப்பிடம் தெரியப்படுத்தியிருந்தனர். ஆகையினால், ஆசிய நாட்டில் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது ஏற்கனவே புலிகளால் நிராகரிக்கப்பட்டதாகியது.

இதேபோன்றதே யுத்தநிறுத்த உடன்பாடு திருத்தம் குறித்துப் பேச்சுவார்த்தை என்பதும். அதாவது யுத்தநிறுத்தத்தில் திருத்தம் செய்ய வேண்டிய தேவைஏதும் இல்லை. அதன் அமுலாக்கம் குறித்தே முதலில் பேசவேண்டும். திருத்தம் குறித்த பேச்சுவார்த்தை நடத்தப் புலிகள் இயக்கம் தயாராக இல்லை என்பது அவர்களின் உறுதியான நிலைப்பாடாகும்.

இந்தவகையில் அரசாங்கம் சமாதான முயற்சிகள் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள் எவையும் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும் அளவிற்கு உறுதிமிக்கவையாகவும் பலம் மிக்கவையாகவும் இல்லை. பேச்சிற்கு அழைத்துள்ளோம் என ஒப்புக்கும்கூறக் கூடியதானதொரு நிலையில் மட்டுமே உள்ளது.

ஆனால் ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணும்வகையிலும் விடுதலைப்புலிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையிலும் மேற்கொள்ளும் முயற்சிகள் உறுதியானவையாகவும், தெளிவானவையாகவும் உள்ளன. இதற்கான அரசியல்,இராணுவ இராஜதந்திரரீதியிலான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முனைப்புப்படுத்தியுள்ளது என்று கூறின் அது மிகையாகமாட்டாது.

இதில் இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கும், யுத்தத்திற்கு ஏற்றவகையில் தயார்படுத்தும் நடவடிக்கையிலும் அரசாங்கம் தீவிரம் கொண்டதாக உள்ளது. இதனை அதன் இரண்டு நடவடிக்கைகள் தெளிவாக உணர்த்துபவையாக உள்ளன.

1.2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் இராணுவச் செலவீட்டிற்கென 9600 கோடிரூபா ஒதுக்கீடு செய்துள்ளமை.

2.இராணுவத் தலைமைப்பீடத்திலும், ஏனைய கட்டளைப்பீடங்களிலும் மேற்கொள்ளப் பட்டுள்ள மாற்றங்கள்.

சிறிலங்கா வரவு-செலவுத்திட்டத்தில் ஆயுதப்படைக்கென இதுவரையில் ஒதுக்கப்பட்ட அதிகூடிய நிதியாக இது உள்ளது. அதாவது உச்சமாக யுத்தம் நடந்த காலமான கடந்த நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் கூட இவ்வளவு பெருமளவு நிதி வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ஆயுதப்படைக்கென ஒதுக்கப்பட்டதாக இல்லை.

ஆகையினால், சமாதான முயற்சிகளில் அரசாங்கம் நம்பிக்கை எதையும் கொண்டிருப்பின் இப்பெரும் தொகை நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டியதொரு தேவை இல்லை. அதிலும் பெரும் மானியத்திட்டங்களைக் கொண்ட வரவு-செலவுத்திட்டத்தில் இப்பெரும் தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையானது அரசாங்கம் எவ்வகையாயினும் இராணுவத்தை நவீனப்படுத்தி போரி[illegible] நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வுடன் செயற்பட்டுள்ளதாகவே கொள்ளத்தக்கதாகும்.

அடுத்ததாக சிறிலங்கா இராணுவத்தளபதியாக லெப்.ஜெனரல் சரத்பொன்சேகாவை நியமித்ததன் மூலம் இனப்பிரச்சினை தொடர்பாக எந்தவிதவிட்டுக்கொடுப்புடனும் இராணுவம் நடந்துகொள்ளப்போவதில்லை/மாட்டாது என்பதை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

எடுத்துக்காட்டாகக் கூறுவதானால் ரணில் அரசாங்கக்காலத்தில் நடந்த சமாதானப்பேச்சுவார்த்தைகளில் உபகுழுக்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் - குறிப்பாகப் பாதுகாப்பு உபகுழு பேச்சுவார்த்தைகள் சரத்பொன்சேகாவினாலேயே முறிவடைந்தது. அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டுவிதிகள் மூலம் மக்களின் குடியிருப்புக்களில் இருந்து வெளியேற வேண்டிய இராணுவத்தின் வெளியேற்றத்தை முடக்கி உயர்பாதுகாப்புவலயம் என்பதை விஸ்தரித்து உடன்பாட்டு அமுலாக்கத்திற்கு முட்டுக்கட்டை போட்டதோடு, மக்களை மீளக் குடியேற்ற அனுமதிப்பதானால் யுத்தநிறுத்த விதிகளுக்கு மாறாகப் புதிய விதிகளைப் போட்டு பேச்சுவார்த்தைகளின் முடக்கத்திற்கும், முடிவிற்கும் கொண்டுவந்தவராகும்.

இந்தவகையில் சமாதான முயற்சிகளையே தமது நடவடிக்கையினால் முடக்கத்திற்கு உள்ளாக்கிய அவரை இராணுவத் தளபதியாக நியமித்துள்ளதோடு இராணுவ அதிகார மட்டத்தில் பெரும் மாறுதல் செய்வதற்கு முழு அளவிலான ஒத்துழைப்பையும் அரசாங்கம் அளித்துள்ளமையானது வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பெரும் தொகை நிதியைப் பயன்படுத்தி இராணுவத்தை நவீனப்படுத்தி யுத்த நிறுத்தத்திற்குத் தயார் செய்வதற்கானதே ஆகும்.

அடுத்ததாக மகிந்தராஜபக்ஷ அரசாங்கம் விடுதலைப்புலிகள் மீது இராஜதந்திர ரீதியில் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் மேற்கொள்ளும் முயற்சியாகும். இந்த வகையில் குறிப்பிடத்தக்கதாகக் கொள்ளத்தக்கது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலைப் புலிகள் மீது தடைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கையாகும்.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர பொறுப்பேற்றதன் பின்னராக மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பெரிய முயற்சியாக இதனைக் கொள்ளமுடியும். அதாவது இந்தியாவை சமாதான முயற்சியில் ஏற்பாட்டாளராக/மத்தியஸ்தராகக் கொண்டு வருவதற்கு மேற்கொண்ட முயற்சிக்குப் பின்னான அடுத்த முயற்சியாக இதனைக்கொள்ள முடியும்.

இம்முயற்சியினால் சிறிலங்கா அரசு சில அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கருதுகின்றது.

1.ஐரோப்பாவில் பேச்சுக்களை நடத்துவது என்ற புலிகளின் கோரிக்கையைப் பலவீனப் படுத்துவது

2. புலிகளை அரசியல், பொருளாதார ரீதியில் பலவீனப்படுத்துவது.

கடந்த இரு வாரங்களுக்குள் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகள் மீது தடைவிதிக்க வேண்டும் என்றதொரு கோரிக்கையை இந்தியா விடுத்திருந்தது. இத்தகையதொரு கோரிக்கையை இந்திய அரசு இன்றைய நிலையில் ஏன் விடுக்கவேண்டியிருந்தது என்பது தெரியவரவில்லை. அதேவேளை இந்திய அரசு இதற்குத் தெரிவித்திருந்த காரணமும் அறிய முடியவில்லை.

ஆனால் இந்திய அரசின் இக்கோரிக்கையும், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரிட்டனின் தலைமைத்துவமும் சிறிலங்கா அரசை மீண்டும் ஒரு தடவை விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யவேண்டும் என்ற கோரிக்கையை விடவைத்திருத்தல் கூடும்.

இக்கோரிக்கை ஐரோப்பிய ஒன்றியத்தால் ஏற்றுக்கொள்ளப்படுமாக இருந்தால்-சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஐரோப்பாவில் நடத்த வேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் கோரிக்கை பலவீனம் அடையலாம் என்று சிறிலங்கா அரசாங்கம் கருதுவதை முற்றிலும் தவறாகக் கொள்ள முடியாது. ஏனெனில் ஐரோப்பிய ஒன்றியத்தில் தடைவருமாகில் நோர்வே தவிர்ந்த ஐரோப்பிய நாடுகளில் பேச்சுவார்த்தை என்பது சாத்தியமற்றதாகிவிடும்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகள் விடுதலைப்புலிகள் மீது மட்டும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக இல்லை. தம்மீதும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக உள்ளன என்பதை ஐரோப்பியநாடுகள் மட்டுமல்ல ஜப்பான் மற்றும் மேற்குலகநாடுகள் புரிந்துகொள்ளக் கூடியதான சம்பவங்களும் இடம்பெறாமல் இல்லை.

எடுத்துக்காட்டாக வன்னிப்பகுதிக்கு நோர்வேப் பிரதிநிதிகள் தவிர்ந்த ஏனைய பிரதிநிதிகள் செல்வதற்குச் சிறிலங்கா அரசு விதித்தள்ளதடையும் அதனை அமுல்செய்வது போன்று ஜப்பான்விசேடதூதுவர் யசூசிஅகாசி வன்னிசெல்ல அனுமதி வழங்காமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அதாவது சிறிலங்கா அரசாங்கம் ஐரோப்பாவிலிருந்து புலிகளை அந்நியப்படுத்துவதில் மட்டுமல்ல வடக்கு-கிழக்கில் இருந்தும், புலிகளிடம் இருந்தும் ஐரோப்பிய நாடுகளை அந்நியப்படுத்த/ஓரம்தள்ள முனைகின்றது என்பதே அதன் அணுகுமுறையாகும். அதாவது ஐரோப்பிய நாடுகளை இனப்பிரச்சினையில் இருந்து வெளியேற்றிவிடுதல் என்பதாகும்.

அடுத்ததாக ஐரோப்பாவில் புலிகள் மீது தடைவிதிப்பதென்பது புலம் பெயர்ந்து ஐரோப்பாவில் வாழும் இலங்கைத்தமிழர்களின் அரசியல் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகளை விளைவிப்பதாகவும், விடுதலைப்புலிகளுக்கு ஏதோ வழியில் அங்கிருந்து கிடைக்கக்கூடிய நிதி மற்றும் உதவிகளுக்கு இடையூறுகளைத் தோற்றுவிப்பதாகவும் அமையும் என்பது சிறிலங்கா அரசாங்கத்தின் எதிர்பார்க்கையாகும்.

ஆனால் இவ்விடயத்தில் எந்தளவிற்கு சிறிலங்கா அரசு வெற்றிபெறும் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் ஏற்கனவே விடுதலைப்புலிகளைத் தடைசெய்துள்ள ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்திற்கான செயற்பாடுகளை முடக்கப்பட்டதாகவோ, கைவிடப்பட்டுள்ளதாகவோ இல்லை.

ஆனால சிறிலங்கா அரசாங்கம் இதில் வெற்றிபெறுகின்றதோ இல்லையோ அது சமாதான முயற்சிகளில் காட்டும் ஆர்வம், அக்கறை என்பதை விட அது யுத்தத்தை முன்னெடுப்பதிலும் விடுதலைப்புலிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கையிலும் தீவிர அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது என்பதே நிதர்சனமானதாகும். இதற்கு சிறிலங்காஅரசியல் யதார்த்தமே அடிப்படையாகும்.

அதாவது சனாதிபதி மகிந்தராஜபக்ஷ சமாதானப்பேச்சுவார்த்தை தொடர்பாகத் தெரிவிக்கும் கருத்துக்கள், அபிப்பிராயங்கள் அனைத்துமே புறச்சூழல் காரணமானவையே. ஆனால், ஆளும் மகிந்தவிற்கு ஆதரவளிக்கும் கூட்டணிக்குள் நிலவும் - அதாவது, அகச்சூழ்நிலை அதற்கு ஏற்றதாக இல்லை. அவர்களுக்குள் இனப்பிரச்சினை தொடர்பான ஒருமித்த கருத்து இல்லை. அதிலும் குறிப்பாக, பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றைக் காண்பதற்குத் தயாராக இல்லை. ஆகையினால் சமாதானப்பேச்சுவார்த்தை என்பது மகிந்தராஜபக்ஷவைப் பொறுத்து நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கான தற்காலிக நகர்வு என்பதாக மட்டுமே இருக்கமுடியும்

ஜெயராஜ்




**12-12-2005-**
**18-12-2005**

## 12

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்படும் சம்பவங்களுக்கு சிறிலங்கா படைப்புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்தியங்கும் தேசவிரோத ஆயுதக்கும்பலே காரணம் என தேசவிரோத ஆயுதக்கும்பலின் செயற்பாடுகளால் அதிருப்தியுற்று விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த புகழ்வேந்தன், தீபன் ஆகிய இரு இளைஞர்களும் கரடியனாறு தேனகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரியப்படுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்ட வந்தாறுமூலையில் இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத்தாக்குதலில் இரண்டு சிறிலங்காப் படையினர் காயம்.

புளொட் குழுவின் முக்கியஸ்தரும் மத்திய குழு உறுப்பினருமான பாருக் என அழைக்கப்படும் சின்னத்தம்பி கணேசலிங்கம் என்பவர் வவுனியாவில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தல்.

தமிழீழ தேசம் எவ்வளவு விரைவாக விடிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருக் கிறதோ அதேபோன்று இளம் தலைமுறை யினரும் போருக்குமுகம்கொடுத்தபடியே சகலதுறையிலும் முன்னேறி வருகின்றனர் என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலைத்துறையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் பொது தெரிவிப்பு

மன்னார் பேசாலைக் கடற்கரைக்கு அருகாமையிலுள்ள சிறிலங்கா பொலிஸ் நிலையம் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் சபஇன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 21 பொலிசார் காயம்.

யாழ். பலாலி வீதி திருநெல்வேலிப் பகுதியிலுள்ள ஆலடிச்சந்தியில் போக்குவரத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் கடும் தாக்குதல் நடத்தினர். இதில் திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உட்பட பலர் படுகாயம்.

இந்திய கடற்படையின் கிழக்குப் பிராந்திய தளபதி வைஸ் அட்மிரல் சுரேஸ் மேத்தா



கொழும்பு வந்தார்.

## 13

யாழ். குடாநாட்டில் சிறிலங்காப் படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன் போது இளைஞர் ஒருவர் கைது.

வவுனியா நகரப்பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற் கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு கிரான் பறங்கியாமடுவில் இனந்தெரியாத நபர்களினால் இருவர் சுட்டுக் கொலை.

## 14

தென்மராட்சிப் பிரதேசத்தின் கச்சாய் பகுதி சிறிலங்கா படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மன்னாரில் சிறலங்கா இராணுவத்தினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது இரண்டு தமிழ் இளைஞர்கள் கைது.

சிறிலங்கா வான் படைக்குச் சொந்தமான எம்ஐ 17 ரக உலங்குவானூர்தி மீது அம்பாறை அருகம்பே பிரதேசத்தில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

திருகோணமலை மாவட்டம் பாலையூற்றில் பொலிசாருடன் இணைந்து பணியாற்றும் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை.

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி தலைவர்களை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசினார்.

## 15

சிறிலங்கா இராணுவத்தினர் தமது அடக்கு முறைகளைக் கட்டுப்படுத்தி மக்களின் இயல்பான வாழ்விற்கு வழி விடாவிடில் இந்த ஒடுக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழுந்து போராடத்தயாராக இருப்பதாக யாழில் கண்காணிப்புக் குழுவினரை நேரில் சந்தித்தபோது பொங்கியெழும் மக்கள்படை அறிவுறுத்தி யுள்ளனர்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளின் ஏற்பாட்டாளர்களாக நோர்வே தொடர்ந்தும் செயற்படுமென சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஹொங் கொங்கில் நோர்வே வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த போது தெரிவித்தார்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹொக்லண்ட் வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளரைச் சந்தித்துப் பேசினார்.

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் நமது ஈழநாடு நாளேட்டின் அச்சகம் மற்றும் அலுவலகத்திற்குள் அத்துமீறி உள்நுழைந்து சிறிலங்காப் படையினர் தேடுதல் என்ற பெயரில் கெடுபிடிகளை மேற்கொண்டுள்ளனர்.

## 16

நல்லூர் பின் வீதியில் ஈருருளியில் வந்த மாணவர் இருவர் சிறிலங்காப் படையினரால் கடுமையாக தாக்கப்பட்டு படுகாயப்படுத்தப் பட்டுள்ளனர்.

அரியாலை மற்றும் மீசாலைப் பகுதிகள் சிறிலங்கா படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். கோப்பாய் தரவையிலுள்ள முதல் பெண் மாவீரர் 2ம் லெப் மாலதியின் நினைவாலயவளாகத்துள் புகுந்த இராணுவம் அங்கிருந்த நினைவுச் சின்னங்களைச் சேதப் படுத்தியுள்ளதுடன் உடமைகள் சிலவும் படையினரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சு நடத்த முன் வருமாறு நோர்வே அனுசரணையாளர் ஊடாக விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாக அரசாங்கப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் மாநாட்டில் தெரிவிப்பு

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் கொழும்பிலுள்ள இராணுவத் தலைமை யகத்துக்கு விஜயம் செய்து இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன் சேகாவுடன் பேசி னார்.

## 17

புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த இளையதம்பி தர்சினி (வயது-20) என்பவர் சிறிலங்கா கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை

யுத்த நிறுத்த உடன் பாட்டை அமுலாக்குவது பற்றிப் பேச நாங்கள் தயாராக இருக்கின்றோம். இப்பேச்சுக்கள் ஐரோப்பிய நாடு ஒன்றில் நடைபெற வேண்டும். நோர்வே அனுசரணையாளராக இருப்பதால் அங்கு பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் இந்தநிலைப் பாட்டில் மாற்றமெதுவுமில்லை. ஆசியநாடொன்றில் பேச வேண்டுமென அரசாங்கம் வலியுறுத்துவது ஒரு சதி முயற்சி என அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களுடனான சந்திப்பின் பின் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவிப்பு.

புதிய அரசின் போக்குகள் மாறுபட்டதாக இனவாத நோக்கம் கொண்டதாகவுள்ளது. மக்களின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. இனவாதம் இப்போது இன்னும் வளர்ந்து கொண்டிருக்கின்றது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து அரசியல் துறைப் பொறுப்பாளர் அவர்களைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.



## 18

யாழ்·புங்குடுதீவுப் பகுதியில் சிறிலங்கா படைகளால் கொடூரமாகப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்யப்பட்ட இளம் பெண்ணின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொள்வதற்காகச் சென்ற மாணவர்கள் மற்றும் பொது மக்களைத் தடுத்து நிறுத்தி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலில் 35 இற்கும் மேற்பட்டோர் காயம். அத்தோடு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகமும் பல வாகனங்களும் அடித்து நொருக்கப்பட்டன.




கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தை, கிருலப்பனை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டிப் பகுதிகளில் பொலிசார் மற்றும் இராணுவத்தினர் நடத்திய திடீர் சுற்றிவளைப்பில் 200 பேர் கைது.

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் வைத்து யுவதி ஒருவர் சிறிலங்காப் கடற்படையினரால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# அக்கராயன் பிரதேச மக்களின் துயர் போக்குக!

போக்குவரத்தின்போது பெரும் இடர்களை எதிர்நோக்கி வருவதாக அக்கராயன் பிரதேச மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

அக்கராயன், வன்னேரிக்குளம், ஸ்கந்தபுரம் என்பன கிளிநொச்சி மாவட்டத்தின் பழம் பெருங்குடியிருப்புக்களாகும். இங்கிருந்து தமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக மக்கள் கிளிநொச்சி நகரையே நாடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப் பகுதியிலிருந்து பாடசாலை மாணவர்கள் தொடக்கம் உத்தியோகஸ்தர்கள் மற்றும் ஏனைய தொழிலாளர் கள் எனப்பலரும் கிளிநொச்சி மற்றும் அதனூடாக பல பகுதிகளுக்கும் அன்றாடம் பயணித்து வருகின்றனர். அத்தோடு, அக்கராயன் ஊடாகவே வன்னேரிக்குளம், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளுக்கு செல்வதற்கான பிரதான சாலைகள் அமைந் துள்ளன. இதேவேளை, அக்கராயனையும் கிளிநொச்சியையும், ஏ-9 நெடுஞ்சாலையையும் அக்கராயனையும் இணைக்க இரண்டு பாதைகள் அமைந்துள்ளன. ஒன்று திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கிச்செல்லும் பாதை. மற்றையது கிளிநொச்சி டிப்போச் சந்தியில் தொடங்கி புதுமுறிப்பு யூனியன் குளம் ஆகிய பகுதியினூடாகச் செல்லும் பாதை இவை இரண்டுமே அப்பகுதிகளை இணைக்கும் பிரதான சாலைகளாகும். இப்பாதைகள் கடந்த கால போர்ச்சூழலின்போது பாரிய குன்றும் குழியுமாகக் காணப்பட்டன. இருப்பினும் இடையிடையே கிரவல்கள் போடப்பட்டு ஓரளவு சீராக்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் அக்காலப்பகுதியில் கூட போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்படவில்லை. அப் பாதைகளில் அமைந்திருந்த பாலங்களும் ஓரளவு சீராக இருந்தன.



முறிகண்டி - அக்கராயன் வீதி

ஆனால், இப்போது திருமுறிகண்டி தொடக்கம் அக்கராயன் செல்லும் வீதியில் அமைந்துள்ள நீர் போக்கிகள், பாலங்கள் அனைத்தும் அண்மைக்காலமாக பெய்த கடும் மழையினால் முற்றாக உடைவுகளுக்குள்ளாகிக் காணப்படுகின்றன. இதேபோன்று டிப்போச் சந்தியிலிருந்து அக்கராயன் செல்லும் சாலையில் அமைந்துள்ள பாலங்களும் பாரியளவில் உடைவு களுக்குள்ளாகியுள்ளன. யூனியன்குளப்பகுதியில் அமைந்துள்ள பாலம் பாரியளவில் சேதமடைந்து அபாயமான நிலையிலுள்ளது. கோணாவில்-ஸ்கந்தபுரம் வீதியும் பலத்த சேதமடைந்துள்ளது. இவ்வீதிகள் சேதமுற்றதனால் அக்கராயன், ஸ்கந்தபுரம் வன்னேரி ஆகிய பிரதேசங்களுக்கான தொடர்பு மழைவெள்ளம் ஏற்பட்ட நாட்களில் முற்றாக துண்டிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது. எனவே இப்பாதைகளைப் புனரமைக்க முன்வருமாறும் அபாய நிலையிலுள்ள பாலங்களைத் தற்காலிகமாகவேனும் விரைவாக புனரமைத்துத்தருமாறும் அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட வர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**-இ. சசி**



யூனியன்குளம் பாலம்



அக்கராயன் வீதி

# வடக்கு-கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டம்

## யாழ்.மாவட்டம் கட்டம் II-2006

## தொகுதி-Iஇல் தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள்

உலகவங்கியின்நிதி உதவியுடன் வடக்கு-கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ்.மாவட்டத்தில் தொகுதி ஒன்றில் கீழ்க்காணும் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்பதனை அறியத் தருகின்றேன். இக்கிராமத்தெரிவில் ஏதாவது குறைகள்/ஆட்சேபனைகள் இருப்பின் எனக்குஎழுத்து மூலம் ஏழு (07) நாட்களுக்குள் அறியத்தருமாறுகேட்டுக்கொள்கின்றேன்.

| தொ. இல | பிரதேச செயலர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | தெரிவு செய்யப்பட்ட கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 01 | நெடுந்தீவு | நெடுந்தீவு கிழக்கு | கோட்டைக்காடு |
| 02 | நெடுந்தீவு | நெடுந்தீவு கிழக்கு | அலுமாவனா |
| 03 | யாழ்ப்பாணம் | கோட்டை | கோட்டை |
| 04 | யாழ்ப்பாணம் | குருநகர் மேற்கு | குருநகர்மேற்கு |
| 05 | யாழ்ப்பாணம் | யாழ்.நகர் கிழக்கு | யாழ்.நகர் கிழக்கு |
| 06 | யாழ்ப்பாணம் | நாவாந்துறைதெற்கு | நாவாந்துறை தெற்கு |
| 07 | யாழ்ப்பாணம் | பாசையூர் மேற்கு | பாசையூர் மேற்கு |
| 08 | காரைநகர் | காரை மத்தி | ஆயில் |
| 09 | காரைநகர் | காரைதெற்கு | பாலாவோடை |
| 10 | காரைநகர் | காரை தென்மேற்கு | நீலங்காடு |
| 11 | காரைநகர் | காரை தெற்கு | ஊரி |
| 12 | ஊர்காவற்றுறை | பருத்தி அடைப்பு | கோட்டையடி |
| 13 | ஊர்காவற்றுறை | பருத்தி அடைப்பு | பருத்தி அடைப்பு |
| 14 | ஊர்காவற்றுறை | புளியங்கூடல் | புளியங்கூடல் தெற்கு |
| 15 | கோப்பாய் | இருபாலை கிழக்கு | இருபாலை கிழக்கு |
| 16 | கோப்பாய் | உரும்பிராய் தெற்கு | யோகபுரம் |
| 17 | கோப்பாய் | அச்சுவேலி தெற்கு | அச்சுவேலி தெற்கு |
| 18 | கோப்பாய் | கல்வியங்காடு | ராஜவீதி |
| 19 | கோப்பாய் | கோப்பாய் மத்தி | காந்திக்கிராமம் |
| 20 | கோப்பாய் | அச்சுவேலி மேற்கு | தோப்பு |
| 21 | கோப்பாய் | இருபாலை கிழக்கு | வசந்தபுரம் |
| 22 | கோப்பாய் | வளலாய் | வளலாய் கிழக்கு |
| 23 | கோப்பாய் | நவக்கிரி | இத்தியடி |
| 24 | கோப்பாய் | புத்தூர் மேற்கு | வேம்பிராய் |
| 25 | கோப்பாய் | ஆவரங்கால்கிழக்கு | புத்தகலட்டி |
| 26 | கோப்பாய் | நீர்வேலி மேற்கு | ஆனந்த கானம் [வடக்கிழக்கு] |
| 27 | கோப்பாய் | புத்தூர் மேற்கு | நவக்கிரி [புத்தூர் மேற்கு] |
| 28 | கோப்பாய் | இருபாலை தெற்கு | ஆனந்தபுரம்திடல் |
| 29 | கோப்பாய் | நீர்வேலி தெற்கு | பரமேஸ்வரி |
| 30 | கோப்பாய் | நவக்கிரி | வடக்குவேலி |
| 31 | கோப்பாய் | அச்சுவேலி மேற்கு | அச்சுநகர் |
| 32 | கோப்பாய் | அச்சுவேலி தெற்கு | காராத்துடி |
| 33 | கோப்பாய் | சிறுபிட்டி கிழக்கு | கோலைப்பறுத |
| 34 | கோப்பாய் | வளலாய் | வளலாய் மேற்கு |
| 35 | கோப்பாய் | நீர்வேலி தெற்கு | கொலனி |
| 36 | கோப்பாய் | புத்தூர்மேற்கு | புத்தூர் |
| 37 | கோப்பாய் | புத்தூர் மேற்கு | இந்துசிட்டி |
| 38 | கோப்பாய் | சிறுபிட்டி மேற்கு | நாகதம்பிரான் |
| 39 | நல்லூர் | வண்ணார்ப்பண்ணை வட மேற்கு | வண்ணார்ப்பண்ணை வடமேற்கு |
| 40 | நல்லூர் | கொக்குவில் மத்தி கிழக்கு | கொக்குவில் மத்தி கிழக்கு |
| 41 | நல்லூர் | கோண்டாவில் மத்தி கிழக்கு | கோண்டாவில் மத்தி கிழக்கு |
| 42 | நல்லூர் | கொக்குவில் மேற்கு | கொக்குவில் மேற்கு |
| 43 | நல்லூர் | சங்கிலியன்தோப்பு | சங்கிலியன்தோப்பு |
| 44 | பருத்தித்துறை | துன்னாலை வடக்கு | புளியங்கள் |
| 45 | சண்டிலிப்பாய் | ஆனைக்கோட்டை | காக்கை தீவு |
| 46 | சண்டிலிப்பாய் | ஆனைக்கோட்டை | 3ஆம்கட்டை |
| 47 | சண்டிலிப்பாய் | மாரீசன்கூடல் | மாரீசன் கூடல் |
| 48 | சண்டிலிப்பாய் | ஆனைக்கோட்டை | முள்ளி |
| 49 | சண்டிலிப்பாய் | சண்டிலிப்பாய் மத்தி | சண்டிலிப்பாய் மத்தி |
| 50 | சண்டிலிப்பாய் | ஆனைக்கோட்டை | சோமசுந்தரம் வீதி |
| 51 | தெல்லிப்பழை | மல்லாகம் தெற்கு | இக்கிராமனை |
| 52 | தெல்லிப்பழை | அளவெட்டி மேற்கு | முருங்கையற்புலம் |
| 53 | தெல்லிப்பழை | வசாவிளான்கிழக்கு | சுந்தரபுரம் |
| 54 | தெல்லிப்பழை | அளவெட்டி கிழக்கு | கம்பாலை |
| 55 | தெல்லிப்பழை | அளவெட்டி வடக்கு | திரிப்டி |
| 56 | தெல்லிப்பழை | கட்டுவன்மேற்கு | கட்டுவன்புலம் |
| 57 | தெல்லிப்பழை | மல்லாகம் மத்தி | மல்லாகம் மத்தி |
| 58 | தென்மராட்சி | கைதடி நாவற் குழி | கைதடி நாவற்குழி |
| 59 | தென்மராட்சி | மந்துவில் வடக்கு | மந்துவில் வடக்கு |
| 60 | தென்மராட்சி | கொடிகாமம் மத்தி | கொடிகாமம் மத்தி |
| 61 | தென்மராட்சி | மந்துவில் கிழக்கு | மந்துவில் கிழக்கு |
| 62 | தென்மராட்சி | மிருசுவில் வடக்கு | மிருசுவில் வடக்கு |
| 63 | தென்மராட்சி | கோவில் குடியிருப்பு | கோவில் குடியிருப்பு |
| 64 | தென்மராட்சி | குடமியன் | குடமியன் |
| 65 | தென்மராட்சி | இடைக்குறிச்சி | இடைக்குறிச்சி |
| 66 | தென்மராட்சி | மந்துவில் மேற்கு | மந்துவில் மேற்கு |
| 67 | தென்மராட்சி | வெல்லாம்பொக்கட்டி | வெல்லாம் பொக்கட்டி |
| 68 | தென்மராட்சி | நுணாவில்மத்தி | நுணாவில் மத்தி |
| 69 | தென்மராட்சி | வரணி இயற்றாலை | வரணிஇயற்றாலை |
| 70 | தென்மராட்சி | கைதடி நுணாவில் | கைதடிநுணாவில் |
| 71 | தென்மராட்சி | கொடிகாமம் தெற்கு | கொடிகாமம் மேற்கு |
| 72 | தென்மராட்சி | நாவற்காடு | நாவற்காடு |
| 73 | தென்மராட்சி | மிருசுவில் தெற்கு | மிருசுவில் தெற்கு |
| 74 | தென்மராட்சி | தாவளை இயற்றாலை | தாவளை இயற்றாலை |
| 75 | தென்மராட்சி | கொடிகாமம் வடக்கு | கொடிகாமம் வடக்கு |
| 76 | உடுவில் | சுன்னாகம் மத்தி | சுன்னாகம் மத்தி |
| 77 | உடுவில் | ஈவினை | ஈவினை |
| 78 | உடுவில் | ஏழாலை வடக்கு | ஏழாலை வடக்கு |
| 79 | உடுவில் | புன்னாலைக்கட்டுவன் தெற்கு | புன்னாலைக்கட்டுவன் தெற்கு |
| 80 | உடுவில் | தாவடி வடக்கு | தாவடி வடக்கு |

**க.கணேஸ்,**
**அரச அதிபர்,**
**யாழ்ப்பாணமாவட்டம்.**

(13610)

# 350ரூபா உரம்வழங்கும் திட்டம்; ஜே.வி.பி. கடும் அதிருப்தி

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 350 ரூபாவுக்கு உரம் வழங்கும் திட்டம் சிங்களவர்கள் மத்தியில் தோல்வியடைந்து விட்ட நிலையில் மகிந்தவின் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி தனது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் மகிந்தவுக்கு ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க எழுதியுள்ள கடிதத்தில் சனாதிபதி தேர்தலில் முன்வைக்கப்பட்ட மகிந்தவின் சிந்தனையின் படி அனைத்து உர வகைகளையும் 350 ரூபாவுக்கு வழங்குவதற்கு உறுதியளித்தோம்.

அதேபோல் நீங்கள் சனாதிபதியானவுடன் அந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்தீர்கள். எனினும் அதில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. சில மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இதுவரை 350 ரூபாவிற்கு உரம் கிடைக்கவில்லை.

கடந்த தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்றமைக்கு இந்தக் கொள்கையும் ஒரு காரணமாகும். அக்கொள்கையுடன் நீங்கள் செயற்பட தவறுகின்ற பட்சத்தில் அதற்கு ஜே.வி.பியாகிய நாங்களும் பொறுப்புக் கூறவேண்டும். இதனால் இப்பிரச்சினை குறித்து உங்களது கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் தீர்மானித்தோம்.

உரத்தை மானியமாக பெற்றுக் கொள்வதற்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சிலர் தேவைக்கு அதிகமான உரத்தை சேமித்துக் கொள்கின்றனர். இதனால் அனைத்து விவசாயிகளுக்கும் உர மானியம் கிடைப்பதில்லை.

இந்நிலையைக் கட்டுப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் உங்களது மகிந்த சிந்தனையில் குறிப்பிட்ட உரமானியக் கொள்கை பொய்யானதாகிவிடும் என்று நினைவூட்டுகின்றோம் என்று ஜே.வி.பி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

# பங்குச் சந்தைவீழ்ச்சி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் கல்வியாளர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதையடுத்து ஏற்பட்டுள்ள பதற்றம் சிறிலங்காவின் பங்குச்சந்தையிலும் எதிரொலித்துள்ளது. கொழும்பு அனைத்துப் பங்குச்சந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை பங்குச்சந்தை சுட்டெண்களைவிட 34 புள்ளிகள் நேற்று முன்தினம் வீழ்ச்சியடைந்திருந்தன. பங்குச்சந்தை யில் சுட்டெண்கள் 29 புள்ளிகள் வீழ்ச்சியடைந்திருந்தன.


## அறிவித்தல்

**வெளிவாரிப்பட்டப்படிப்பு**

முகாமைத்துவக் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படும் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்பிற்கான **(G.A.Q. B.Com)** விரிவுரைகள் 24.12.2005 சனிக்கிழமைகாலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்பதனைஅறியத் தருகின்றோம்.

**AAT கற்கைநெறி**

முகாமைத்துவக்கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் **AAT** கற்கை நெறியினைப் பயில்வதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு 24.12.2005 சனிக்கிழமை மாலை 1.00 மணிதொடக்கம் 5.00 மணிவரை முகாமைத்துவக்கல்லூரி, கிளிநொச்சியில் இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**இணைப்பாளர்,**
**முகாமைத்துவக்கல்லூரி,**
**கரடிப்போக்கு,**
**கிளிநொச்சி.**

(சி.13609)

ஆஸிப்பேரவை அனர்த்தத்தின் ஓராண்டு நிறைவையொட்டி

## விசேட மருத்துவ முகாம்

**இடம்:-அரசினர்வைத்தியசாலை மருதங்கேணி**
**காலம்:-23.12.2005 [வெள்ளிக்கிழமை]**
**நேரம்:- காலை 9.00 மணி [புதியநேரம்]**

**யாழ்.போதனா வைத்தியசாலையைச்சேர்ந்த வைத்திய நிபுணர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கவுள்ளனர்.**

**மருத்துவ உதவி தேவையானவர்கள் பங்குபற்றி பயன்பெறுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.**

குறிப்பு- ஆய்வுகூட இரத்தப்பரிசோதனைகள் "எக்ஸ்-கதிர்" பரிசோதனை, 'ஸ்கான்' பரிசோதனை என்பன இடம் பெறும்

குறிப்பு- மருத்துவ பரிசோதனைகள் செய்யவிரும்புவோர் இரவுஉணவிற்குப்பின் உணவு,தேநீர் அருந்தாமல் வருமாறுதரவும்.

*இம் மருத்துவமுகாமை யாழ். சுகாதாரத்திணைக்களத்துடன் இணைந்து மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை நிர்வாகம் ஒழுங்கு செய்துள்ளது.*

**விளம்பர அனுசரணை:-குவி பல்பொருள் உதிரிகள் வாணிபம்**

**யாழ்.சாலை.** (சி.13581) **கிளிநொச்சி.**

# உலக வர்த்தக ஒப்பந்தத்துக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சிகள் போராட்டம்

(புதுடில்லி)


**ஹொங்கொங்கில் நடந்த மாநாட்டில் உலக வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கைபெழுத்திட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கம்யூனிஸ்ட் கட்சிகள் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளன.**

ஹொங்கொங்கில் நடந்த உலக வர்த்தக மாநாட்டில் கொண்டு வரப்பட்ட ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது குறித்து இந்திய மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

உலக வர்த்தக ஒப்பந்தத்தில் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு மானியம் வழங்குவதை குறைப்பதற்கான வரம்பை வரும் 2013 ஆம் ஆண்டு என்ற முன் திகதி குறிப்பிட்ட காசோலையை அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவுக்கு வழங்கியுள்ளன. இந்தச் சலுகையினால் அதிக மதிப்பு இல்லை.

இதற்கு பிரதிபலனாக இந்தியாவில் வெளிநாட்டு நிறுவனங்களின் பங்கு மீதான கட்டுப்பாட்டை தளர்த்துவது மற்றும் நம்முடைய உற்பத்திப் பொருட்களின் மீதான சுங்கவரிகளில் கிட்டத்தட்ட 80 சதவீதத்துக்கு குறைப்பதற்கான சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இந்த சலுகைகளின் மூலம் இந்திய அரசின் கொள்முதல் திட்டத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் பங்கு பெற வழி ஏற்படும். இந்த ஒப்பந்தம் மூலம் வளரும் நாடுகளுக்கு எந்த ஆதாயமும் இல்லை. விவசாயம் மற்றும் இதர துறைகளில் நடந்த ஒப்பந்தம் விவசாயிகளுக்கும் விவசாயத் துறைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். உலக வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்த்து போராட்டம் நடத்தப்படும். என அதில் கூறப்பட்டுள்ளது.

## எம்.எஸ்.இன் தபால் தலை



மறைந்த இசைக்கலைஞர் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் தபால் தலைவெளியீட்டு விழா சென்னையில் கடந்த ஞாயிறு நடந்தது. தபால் தலையை தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட இசைக் கலைஞர் டி.கே.பட்டம்மாள் பெற்றுக்கொண்டார்.

## போட்டிக்குத் தயார்



அமிர்தசரசில் நடந்த சர்வதேச நாய்கள் கண்காட்சியில் தனது நாயையும் பங்குபற்றச் செய்யத் தயாராகுகிறார் அதன் எஜமானி.

# அரச வீட்டை விட்டு வெளியேற மறுக்கிறார் ராப்ரி அரசின் காலக்கெடுவையும் கண்டு கொள்ளவில்லை

(பாட்னா)

பீகாரில் கடந்த 15ஆண்டுகளாக பதவியிலிருந்த லல்லு கட்சி தோல்வி அடைந்து சமீபத்தில் நடந்த சட்டசபைத்தேர்தலில் பா.ஜனதா-ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி வெற்றிபெற்று நிதிஷ்குமார் முதல் மந்திரி பதவி ஏற்றுவிட்டார். இந்நிலையில்அவர் குடியேற வசதியாக முதல் மந்திரியின் அதிகாரபூர்வ இல்லத்தைவிட்டு லல்லு-ராப்ரிதேவி குடும்பத்தினர் இன்னும் வெளியேறவில்லை.

முதல் மந்திரி இல்லத்தில் இருந்து வெளியேறும்படி கடந்த 24 ஆம் திகதியும், இந்த மாதம் 13ஆம் திகதியும் ராப்ரிக்கு இரண்டு கட்டமாக உத்தரவு வழங்கப்பட்டது.

அதில்இன்னும் ஒருவார காலத்திற்குள்இல்லத்தைவிட்டு வெளி யேறி அரசு ஒதுக்கியுள்ள புதிய வீட் டில் குடியேற வேண்டும் என்று கெடு விதிக்கப்பட்டிருந்தது.இந்தக் கெடு நாளையுடன் முடிவடைகிறது.ஆனால் கூடுதல் அவகாசம் தேவை என்று லல்லு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

ராப்ரியும், லல்லுவும் வீட்டை விட்டு வெளியேற தாமதம் செய்வதற்கு ஆடு,மாடு,குதிரை,பூனைகளே காரணம் என்பது தெரிய வந்துள்ளது. முதல் மந்திரி வீட்டில் நூற்றுக்கணக்கான பசு,எருமை,குதிரை மற்றும் பூனைகளை லல்லு தம்பதியினர் வளர்த்து வருகிறார்கள். அதை உடனடியாக வேறு இடத்துக்கு கொண்டு செல்ல முடியாமல் தவிப்பதே தாமதத்திற்கு காரணம் என்று தெரிகிறது.

ஆனால் காலக்கெடுவை நீடிக்க அரசு திட்டவட்டமாக மறுத்து விட்டது.

## மலருக்குள் முகம்



போபாலில் தங்கள் பள்ளியின் ஆண்டு விழாவை முன்னிட்டு நடந்த விழாவில் சிறுவர்கள் மலர்களைப் போன்று வேடமணிந்துள்ளனர்.

# 104 வது அரசியல் சட்ட திருத்ததிற்கு தேசிய சனநாயக கூட்டணி எதிர்ப்பு

(புதுடில்லி)

தனியார் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு அளிப்பது தொடர்பாக அரசியல் சட்டத்தின் 104 ஆவது பிரிவில் திருத்தம் கொண்டு வரும் மத்திய அரசின் முயற்சியை தே.ஜ. கூட்டணி எதிர்க்க முடிவு செய்துள்ளது.

இந்தப் புதிய சட்டத்தில் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தக் கல்வி நிறுவனங் களின் இடஒதுக்கீடு வழங்குவதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

மத்தியரசின் இந்த நடவடிக்கையை தே.ஜ, கூட்டணிற் எதிர்க்க முடிவு செய்துள்ளது. இது குறித்து விவாதிக்க தே.ஜ கூட்டணித் தலைவர்கள் கூட்டம் நேற்றுமுன்தினம் டில்லியில் நடந்தது. லோக்சபா எதிர்க் கட்சித் தலைவர் எல்.கே அத்வாணி கூட்டத்துக்கு தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் பா.ஜ, அகாலி தளம், பிஜு ஜனதாதளம், ஐக்கிய தளம், திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கலந்து கொண்டன.

# சீர் திருத்தப்பள்ளியிலிருந்து 1௨ குற்றவாளிகள் ஓட்டம்

(பெங்களூர்)

பெங்களூரில் நேற்று முன்தினம் சீர்திருத்தப்பள்ளி ஒன்றிலிருந்த 18 குற்றவாளிகள் பள்ளியின் காவலாளியைத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

பெங்களூர் மடிவான் பொலிஸ் நிலைய பிரிவிற்குட்பட்ட சிறுவர் சீர்திருத்தப்பள்ளி ஒன்றில் குற்றச் செயல்களுக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்த 40 குற்றவாளிகளில் 18பேர் அவ்விடுதியின் காவலாளியைத் தாக்கிவிட்டு அவரிடம் இருந்த விடுதியின் சாவியைப் பறித்து விடுதியைத் திறந்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்களில்15 வயதுச்சிறுவன் விடுதிக்குத் திரும்பியிருக்கிறான். ஏனையோரைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

# சோனியாவின் சுற்றுப்பயணம் இரத்து



(மும்பை)

மத்திய அமைச்சர் பி.எம்.சயீதின் மறைவால் காங். தலைவர் சோனியாவின் மகாராஷ்டிரா சுற்றுப்பயணம் இரத்துச் செய்யப்பட்டது. மகாராஷ்டிராவில் உள்ள மால்வன் சட்டசபைத் தொகுதிக்கு கடந்த மாதம் நடந்த இடைத்தேர்தலில் மாநில வருவாய் அமைச்சர் நாராயண்ரானே பெருமளவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். சட்டசபைத்தேர்தலில் வெற்றிபெற்ற நாராயண் ரானே தனது தொகுதியான மால்வனில் வெற்றிவிழா நடத்த முடிவுசெய்திருந்தார். இந்த விழா மற்றும் முக்கிய தலைவர்கள் கலந்து கொள்வதாக இருந்தது. இந்தவிழா மற்றும் மும்பையிலும் புனேயிலும் நடக்கும் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள சோனியா நேற்று மும்பை செல்ல இருந்தார். மத்திய அமைச்சர் சயீதின் மறைவால் சோனியா தனது சுற்றுப் பயணத்தை இரத்துச் செய்துவிட்டார் என்று மகாராஷ்டிரா காங்கிரஸ் கமிட்டியின் செய்தித் தொடர்பாளர் ஆனந்த் காட்கில் தெரிவித்தார்.

# நெரிசலில் சிக்கி 20 பேர் காயம்

(காலிபொங்)

இசை நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக குறுகிய நுழைவாயிலில் ஒருவரை ஒருவர் முண்டியடித்து சென்றதால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 20 பேர் காயமடைந்தனர். ஏழு பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

மேற்கு வங்கத்திலுள்ள காலிபொங் மாவட்டத்தில் இசை நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திறந்த வெளிமைதானத்தில் நடைபெற இருந்த இந்த நிகழ்ச்சியை காண மைதானத்திற்கு வெளியே மக்கள் குவிந்தனர். பொதுமக்கள் உள்ளே வருவதற்காக மைதானத்தின் நுழைவாயில் கதவு திறக்கப்பட்டது. அப்போது ஒருவரை ஒருவர் முண்டியடித்துக்கொண்டு மைதானத்திற்குள் நுழைய முற்பட்டதால் கடுமையான நெரிசல் ஏற்பட்டது. இதில் 20 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஆக்கி அழித்தல்



புதுடில்லியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை இடிக்கும் பணியில் மாநகராட்சியினர் ஈடுபட்டுள்ளனர்.

# உ.பி.காங்கிரஸ் கட்சியில் விரைவில் மாற்றம் வரும்

சல்மான் குர்ஷித்

உத்தரபிரதேச காங்கிரஸ் கட்சியில் விரைவில் மாற்றம் கொண்டு வரப்படும் என்று அம்மாநிலகாங்கிரஸ் தலைவர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார். சல்மான் குர்ஷித் நேற்றுமுன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.அப்போது அவர் கூறியதாவது; மாநில காங்கிரஸ் குழு விரைவில் மாற்றியமைக்கப்படும். ஏராளமான புதுமுகங்கள் நியமிக்கப்படுவர். கட்சி அமைப்பில் இளம் தலைவர்கள் நியமிக்கப்படுவதால் கட்சிக்கு புதுத்தெம்பு கிடைக்கும்.

ஹைதராபாத்தில் நடைபெறவுள்ள காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் எம்பியான ராகுல் காந்தி கட்சியின் பொதுச் செயலாளராவதையடுத்து நேரு காந்தியின் வாரிசுகளுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் ராகுல் காந்தியால் பயிற்சி அளிக்கப்பட்ட இளம் தலைவர்களுக்கு கட்சியில் பொறுப்பு அளிக்கப்படும் கட்சியில் சேர்க்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் இம்மாதக் கடைசியில் லக்னோவில் நடைபெறும் காங்கிரஸ் பேரணியில் பங்கேற்பர் இவ்வாறு சல்மான் குர்ஷித் கூறினார்.

## இங்கிலாந்து பந்து வீச்சு பயிற்சியாளராக கோ விருப்பம்



இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் டரன் கோ இங்கிலாந்து அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக வர விருப்பம் தெரிவித்துள்ளார்.அவ்வணியின் பந்து வீச்சு பயிற்றுநர் ரொய் கூல் விலகியமையை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப இவரின் பெயரும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இது பற்றி அவர் தெரிவிக்கும்போது; ஏதாவது ஒரு வழியில் அணிக்குச் சேவை செய்வது தனக்கு மகிழ்ச்சியளிப்பதாக கூறியுள்ளார். பந்து வீச்சுப் பயிற்சியில்தான் ஒரு மட்டத்தை அடைந்திருப்பினும் அதன் மூலம் விருதுகளைப் பெறவேண்டும் என்பது தனது அவா என அவர் மேலும் குறிப்பிட்டார்

தற்போது பி.பி.சி தொலைக்காட்சியில் பணியாற்றியபோதும் கிரிக்கெட் அணியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதால் அதில் பங்காளியாகவும் இருக்க வேண்டும் என கோ தெரிவித்துள்ளதுடன் இளம் வீரர்களும் மிகுந்த விருப்பத்தை தெரிவித்திருப்பதாக அவா கூறியுள்ளார்.

# பேர்த் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி இன்றி நிறைவு

தென்னாபிரிக்க அவுஸ்திரேலிய அணி களுக்கிடையில் பேர்த்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி எத்தரப்புக்கும் வெற்றி தோல்வி இன்றி நிறைவு பெற்றது.

491 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா போட்டியின் இறுதி நாளான நேற்று ஆட்ட நேர நிறைவில் தென்னாபிரிக்கா ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றது.





துடுப்பாட்டத்தில் ருடெல்ப் 283 பந்து களை எதிர்கொண்டு ஆட்டமிழக்காது 102 ஓட்டங்களைப் பெற்றார். கெம் 166 பந்துகளை எதிர்கொண்டு 55 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது பௌச்சர் 13 ஓட்டங்களைப்பெற்றார்.

பந்துவீச்சில் ஷேன் வோர்ன் மூன்று விக்கெட்டுக்களையும், பிறேக்கன், பிரட்லீ தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஆட்ட மிழக்காது இரட்டைச் சதம் அடித்த அவுஸ்தி ரேலியாவின் கொக் தெரிவானார்.

அவுஸ்திரேலியா முதல் இனிங்சில் 258 இரண்டாவது இனிங்சில் 528/8 விக்கெட். தென்னபிரிக்கா முதல் இனிங்சில் 296 இரண்டாவது இனிங்சில் 287/5 விக்கெட்.

## பந்தை எறிவதாக குற்றஞ்சாட்டி சபீர் அகமதுக்கு ஓராண்டு தடை



பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சபீர் அகமதுக்கு ஓராண்டு விளையாட சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. விதிமுறைக்கு மாறாக பந்து வீசியதற்காக இத்தண்டனையைப் பெற்றுள்ளார். ஐ.சி.சியின் ஓர் ஆண்டு தடையைப் பெறுவது இவரே முதல்வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கு எதிராக கடந்த மாதம் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் போது இரண்டாவது முறையாக விதிமுறைக்கு மாறாக பந்து வீசிய குற்றச்சாட்டுக்கு உள்ளானார் அவர். இதையடுத்து அவரது பந்து வீச்சை தன்விச்சையாக மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஆய்வு செய்தது. அதில் அவரது வீச்சு முறை யற்றது என்பது உறுதி செய்யப்பட்டது.

அதன் பிறகே அவருக்கு ஓர் ஆண்டு தடை விதிக்க ஐ.சி.சி முடிவு செய்தது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இதே குற்றச்சாட்டுக்கு உள்ளாகி, எச்சரிக் கையைப் பெற்றார் சபீஅகமது. அத்துடன் அவரது வீச்சிலும் மாற்றம் மேற்கொள்ள வேண்டுமென ஐ.சி.சி. எச்சரித்திருந்தது.

பத்து டெஸ்ட் மற்றும் 32 ஒரு நாள் போட்டிகளில் சபீர் அகமது விளையாடி யுள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து சொஹைப் அக்தர்,ஷஹித் அப்ரிடி, முகமது. ஹபீஸ் ஆகியோரும் ஏற்கனவே இப்பிரச்சினை யில் சிக்கி மீண்டது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச உதைபந்தாட்ட சங்கத்தின் விருதையும் வென்றார் ரொனால்டினோ

பிரேசில் உதைபந்தாட்ட நட்சத்திர வீரரும் பார்சிலோனாவின் நட்சத்திர வீரருமான ரொனால்டினோ சர்வதேச உதைபந்தாட்ட சங்கத்தின் இந்த வருடத்துக்கான சிறந்த வீரர் விருதைப் பெற்றதுடன் தொடர்ந்து இரு வருடங்கள் இந்த விருதைப் பெறும் பெரு மையை பெற்றுள்ளார்.

பயிற்றுநர்கள், அணித்தலைவர் களிடையே நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இவர் 960 புள்ளிகளைப்பெற்று முதலிடத்தை வென்றார்.

இவருக்கு அடுத்தபடியாக செல்சியா வீரர் பிராங்லம்பார்ட் 429 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றார். சாமுவல் எட்டோ 190 புள்ளிகளுடன் மூன்றாம் இடத் தைப் பெற்றுள்ளார்.

இந்த மாதம் ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கத்தின் சிறந்த வீரருக்கான விருதையும் பெற்றுக் கொண்ட ரொனால்டினோ, மேற் கூறப்பட்ட விருது தனது அணி வீரர்களின் அர்ப்பணிப்புமாகும் என்று தெரிவித்ததுடன் அவர்களின்றி தனக்கு இந்த விருது கிடைத் திருக்க முடியாது எனத் தெரிவித்துள்ளதுடன் இந்த விருதை தனது குடும்பத்தினருக்கும், கடவுளுக்கும் சமர்ப்பணம் செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

ரொனால்டினோ இந்த விருதை இரண்டாம் தரம் பெறும் மூன்றாவது வீரர் ஆவார். 1996, 1997,2002 ஆண்டுகளில் தனது நாட்டு வீரர் ரொனால் டோவும் 1998,2000,2003ஆம் ஆண்டுகளில் பிரான்ஸ் வீரர் சினடின் சிடேனும் பெற்றுள்ளனர்.



முன்னைய விருது பெற்ற வீரர்கள் விபரம்:- லோதர் மத்தியூஸ் -(1991), மார்கோவன் பாஸ்ரின் -(1992), றொபார்ட்டே பக்கியோ-(1993), றொமாரியோ-(1994), ஜோர்ஜ் வீ -(1995), றொனால்டோ-(1996,1997,2002), சினடின் சிடேன் (1998,2000,2003), றிவால்டோ (1999), லூயிஸ் பிகோ-(2001), றொனால்டினோ (2004,2005).

## இந்திய கால்பந்து அணி தரவரிசையில் முன்னேற்றம்

இந்தியக் கால்பந்து அணி பாகிஸ்தானின் கராச்சி நகரில் நடைபெற்ற தெற்காசிய கால்பந்துப் போட்டியில் பங்கேற்று விளையாடியது. இதன் இறுதிப் போட்டியில் வங்களாதேசத்தை வீழ்த்தி இந்தியா சம்பியன் பட்டம் வென்றது.

இந்த வெற்றியின் மூலம் சர்வதேச கால்பந்து தரவரிசைப் பட்டியலில் 137-ஆவது இடத்தில் இருந்து 125 ஆவது இடத்துக்கு இந்திய அணி முன்னே றியுள்ளது.

## கோல்ட் கோஸ்ட் கிண்ண டென்னிஸில் மார்டினா கிங்கிஸ் பங்கேற்பு



அவுஸ்திரேலியாவில் வரும் சனவரி முதலாம் திகதி நடைபெறும் கோல்ட் கோஸ்ட் கிண்ண டென்னிஸ் போட்டியில் மார்ட்டினா கிங்கிஸ் கலந்துத் கொள்வதாக உறுதி யளித்துள்ளார்.

அவர் கருத்துத் தெரிவிக்கும் போது; போட்டிக[illegible]யாக இருந்தபோதும் அது அடுத்த [illegible] பகுதியில் ஐரோப்பியாவில் நடைபெறும் போட்டிகளுக்கு ஒரு சிறந்த பயிற்சியாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

தனது நோக்கம் தரவரிசையில் முதலாமிடத்தைப் பிடிப்பதே என்று கூறிய அவர் தனது குறிக்கோள் மரியஷரபோவாவை வெல்வதே என்றார். 25 வயதான கிங்கிஸ் மூன்று முறை அவுஸ்திரேலியா ஓபன் தொடரை வென்றுள்ளார். இவர் 2002 ஆம் ஆண்டு காயத்துக்குள்ளாகியதால் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். இவர் மூன்று முறை கிண்ணத்தை வென்றிருந்த போதும் ஒரு போட்டியின்போது தவறான ஆட்டம் காரணமாக எச்சரிக்கப்பட்டிருந்தார்.




## அவுஸ். ஆரம்ப துடுப்பாட்ட வீரர் லாங்கர் காயம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான லாங்கர், தென்னாபிரிக்காவுக்கு எதிராக பேர்த்தில் நடைபெற்றமுதல் டெஸ்டில் காய மடைந்துள் ளார்.

இதனால் அவர் மெல்போர்னில் 26 ஆம் திகதி தொடங்கும் இரண்டாவது டெஸ்டில் விளையாடுவாரா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.



## ஹர்பஜன் சிங்கின் சுழலில் சிக்கியது சிறிலங்கா கடின வெற்றி இலக்கை நிர்ணயிக்க ஆடுகிறது இந்தியா



இந்திய சிறிலங்கா அணிகளுக்கிடையில் அகமதாபாத்தில் நடைபெற்றுவரும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சிறிலங்கா வெற்றி பெற இந்தியா கடினமான வெற்றி இலக்கொன்றை நிர்ணயிக்க ஆடி வருகிறது.

131 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக் கள் என்ற நிலையில் நேற்று தொடர்ந்து ஆடிய சிறிலங்கா 206 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் டில்ஷான் அதிகபட்சமாக 65 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஹர்பஜன்சிங் அபாரமாகப் பந்து வீசி ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். கும்ளே இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனால் 192 ஓட்டங்கள் முன்னிலை யுடன் தனது இரண்டாவது இனிங்சை ஆரம் பித்த இந்தியா நேற்றைய ஆட்ட நேர முடிவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. துடுப்பாட்டத் தில் யுவராஜ்சிங்-75, அகர்க்கர்-48 ஓட்டங்களை அதிகப்பட்சமாகப் பெற்றனர்.



பந்துவீச்சில் முரளி, பண்டார தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் நான்காம் நாள்.



சிந்தனைக்கு

சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமே இல்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 21.12.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## விளைவுகள் விபரீதமாகும்!

படையினரின் மிலேச்சத்தனமான தாக்குதலினால் பல்கலைக் கழக வரலாற்றில் இன்றைய நாள் (19–12–2005) ஒரு கறைபடிந்த நாளாகி விட்டதென்ற யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் த.மோகனதாஸ் அவர்களின் கூற்றுக்கள் மிகவும் முக்கியத்துவமானதாகும். இதனை இலங்கையின் அரசியல் வரலாற்றை விளங்கிக்கொண்டவர்கள் புரிந்துகொள்ளமுடியும்.

அமைதிப் பேரணி நடத்திய யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் மீது மிலேச்சத்தனமாக சிங்கள இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் குறித்தும், அதன் காரணமாக கலைப்பீடாதிபதி, சிரேஷ்ட விரிவுரையாளர், பல்கலைமாணவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியமை தொடர்பாகவும் துணைவேந்தர் தெரிவித்த மேற்கூறிய கருத்துக்கள் எந்த விதத்திலும் தவறானதல்ல.

தமிழ்மக்களும் அவர்களின் ஓர் அங்கமான தமிழ் மாணவர்களும் ஏற்கனவே பல கறுப்பு நாள்களைச் சந்தித்துள்ளனர். ஆனால், அந்நாட்கள் தமிழ் மக்களை முடக்கிப் போட்டதாகவோ கண்ணீர் விட்டுக் கதறி அழுதவாறு ஒதுங்கிக்கிடக்கவோ செய்ததாக இல்லை.

மாறாக தமிழ்மக்களையும் மாணவர்களையும் வீறுகொண்டு எழ வைத்ததே ஒழியே சிங்கள ஒடுக்குமுறையாளர்களிடம் மண்டியிட வைத்ததில்லை.எடுத்துக்காட்டாக கறுப்பு யூலை(1983)யைச் சுட்டிக்காட்ட முடியும்.தமிழ் இளைஞர்கள் வீறு கொண்டெழ வைத்து ஆயுதப்போராட்டத்தை வலுப்படுத்தியது இக்கறுப்பு யூலையே ஆகும்.

இந்த வகையில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் கறுப்பு நாளாகிவிட்ட டிசம்பர் 19 ஆம் திகதியும் தமிழ்மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் ஒரு மைல் கல்லாக சிறிலங்கா ஆட்சியாளர்களின் கனவுகளைக்கலைத்துவிடும் ஒன்றாக இருக்கும் எனத் துணிந்து கூறமுடியும்.

இதேவேளை யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் மீது சிங்கள அரசு அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டதிலிருந்து தமிழர்கள் அனைவரும் ஒன்றைப்புரிந்து கொள்ளவேண்டும். அதாவது, சிங்களப் பேரினவாத அரசு யார் எவர் என்றில்லாது எவர் மீதும் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடத் தயாராக உள்ளது என்பதே அதுவாகும்.

அவ்வாறு இல்லாது விட்டால் யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் அமைதிப்பேரணி மீது தாக்குதல் நடாத்தியிருக்க முடியாது. ஏனெனில் தமிழ்மக்களின் நீண்ட போராட்ட வரலாற்றில் யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தினர் மீது இதுவரை தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இல்லை. போராட்டங்களின்போது மாணவர்கள் தாக்கப்பட்டிருப்பினும் துணைவேந்தர், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் எனப்படுவோர் தாக்கப்பட்டதாக வரலாறு இல்லை.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் கடும் போக்காளர்களை இராணுவத்தில் முதன்மைப்படுத்த விளைந்த போதே முன்னைய நிலையைவிட மோசமானதொரு நிலையைக் கடைப்பிடிக்க ஆட்சியாளர்கள் தயாராகி வருகின்றனர் என்பது உணரப்பட்டே இருந்தது. ஆயினும் பல்கலைக்கழச் சமூகம் போன்றவற்றுடன் வலிந்த முறையில் வன்முறையிற்குச்செல்லுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டதில்லை.

அதுமட்டுமின்றி இப்பேரணி குறித்து ஏற்கனவே யாழ். இராணுவத்தளபதியுடன் துணைவேந்தர் மட்டத்தில் பேசப்பட்ட அதேவேளை, பின்னர் பேரணி சென்றவேளையில் தடுத்த இராணுவத்தினருக்கு இப் பேரணியின் நோக்கம் பற்றி துணைவேந்தர் விளக்கம் அளித்தும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இல்லை. மாறாக, துணைவேந்தர் காயமடையாமல் தன்னைப் பாதுகாக்க வேண்டியவரானார்.

இந்தவகையில் பார்க்கையில் இத்தாக்குதலானது திட்டமிட்ட ரீதியில் நடத்தப்பட்டதொன்று என்பது வெளிப்படையானது. அத்தோடு, அரசாங்கத்தின் அனுமதி, ஒத்துழைப்பின்றி நடத்தப்பட்டதாகவும் சொல்லப்படுவதற்கு இல்லை. ஏனெனில் இது முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட தொன்றாகவே இருந்துள்ளது.

உலக விடுதலைப்போராட்ட வரலாற்றில் மாணவர்களின் பங்கு என்பது மகத்தானதாகவே இருந்துள்ளது. ஆனால் மாணவர்கள் போராட்டங்களில் ஒடுக்குமுறையாளர்களால் சகல வரன்முறைகளையும் மீறி உச்சக்கட்ட ஒடுக்கு முறைகள் மேற்கொள்ளப்படும் போதே நேரடியாகக் குதித்தல் வழமையாகும். இத்தகையதொரு சூழலை தற்பொழுது சிறிலங்கா இராணுவம் ஏற்படுத்தி வருகின்றது. இதன் ஓர் அங்கமாகவே யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் மீதான தாக்குதலைக்கொள்ள முடியும். ஆகையினால், இதன் விளைவுகளை சிறிலங்கா இராணுவத்தரப்பு விரைவில் அனுபவிக்க வேண்டியிருக்கும்.

# அரசின் இழுத்தடிக்கும் போக்கால் யுத்தம் வெடிப்பதை எவராலும் தடுக்க முடியாது

## பாராளுமன்றில் சிவநாதன் கிசோர்

(கொழும்பு)

சமாதான பேச்சுவார்த்தையைத் தொடங்குவதில் அரசாங்கம் இழுத்தடிக்கும் போக்கைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் 2006 ஆம் ஆண்டு மீண்டும் யுத்தம் வெடிப்பதை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாதென தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமனற உறுப்பினர் சிவநாதன் கிசோர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது: இந்த நாடு முன்னேறவேண்டுமானால் முதலில் இனப் பிரச்சினைக்கு முடிவு காணுங்கள். இல்லாவிட்டால் தென்னிலங்கை அரசு மட்டுமல்ல மக்கள் கூட தமது நிம்மதியை இழக்க வேண்டியேற்படும். தற்போது குடாநாட்டில் படையினர் கொடூரத்தனமான செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இளம் யுவதியொருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். படையினரின் இச்செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பொது மக்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். மரண வீட்டில் கலந்து கொள்ளச்சென்ற மாணவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மீது துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. எமது பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கூடக் காயமடைந்துள்ளார்.

இவ்வாறான நிலை தொடர அரசாங்கம் இடமளிக்கக் கூடாது. இடமளிக்குமானால் விரும்பத்தகாத விபரீதங்கள் ஏற்படும். இவ்வாறான செயல்களைத் தடுத்துநிறுத்த வேண்டுமானால் உடனடியாக விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பியுங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் நிலைமை மோசடைந்தே செல்கின்றது. எனவே, சமாதானப் பேச்சில் இழுத்தடிப்பு போக்கை அரசு தொடருமானால் 2006ஆம் ஆண்டு இறுதி யுத்தம் வெடித்தே தீரும். இதனை எவரும் தடுத்து நிறுத்தி விடமுயாது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சர்ச்சைக்குரிய மின்திட்டங்களை செயற்படுத்த சிறிலங்கா அரசாங்கம் தீர்மானம்!

சர்ச்சைக்குரிய நுரைச்சோலை மற்றும் மேல் கொத்தமலை மின்திட்டங்களை அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் சிறிலங்கா அரசாங்கம் முன்னெடுக்கும் என்று மின்சாரத்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ன அறிவித்துள்ளர்.

இந்த மின் திட்டங்களுக்கு எதிர்ப்புகள் இருந்தபோதும் அரசாங்கம் இதை முன்னெடுக்கும் என்றும் அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சி இலக்கான எட்டு வீதத்தை அடைவதற்கு இந்தத் திட்டங்கள் அவசியம் என்றும் ஜோன் செனிவிரட்ன கூறினார். டீசல் மின்உற்பத்தியாளர் கள் தான் இந்த எதிர்ப்புகளுக்குப் பின்னணியில் உள்ளனர் என்றும் ஜோன் செனவிரட்ன குற்றம் சாட்டினார்.

இத்திட்டம் கைவிடப்படுமென மகிந்த உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய கூட்டாட்சிப் பண்புகளை உள்ளடக்கிய ஒற்றையாட்சிமுறை இலங்கைக்குப் பொருந்தும்

## சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

இந்தியாவில் உள்ள கூட்டாட்சிப் பண்புகளை உள்ளடக்கிய ஒற்றையாட்சி முறைமை இலங்கைக்குப் பொருத்தமாக அமையும் என்று சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைமுறையில் இருப்பது கூட்டாட்சி முறையல்ல. கூட்டாட்சி முறைமையின் பண்புகள் அடங்கிய ஒற்றையாட்சிதான். இந்தியாவின் முறைமை இலங்கைக்குப் பொருத்தமானதாக அமையும்.

இந்திய முறைமைக்கு ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெலஉறுமய ஆகிய கட்சிகளும் ஆதரவு வழங்கும்.

ஒற்றையாட்சியா, ஐக்கிய ஆட்சியா என்பது சட்டப் பிரச்சினையாகும். அவை வெறும் வார்த்தைகள் மட்டுமே.வார்த்தைகளில் நாம் குழம்பிவிடாது, எமது நாட்டுக்குப் பொருத்தமான முறையை உருவாக்க வேண்டும்.

அதற்கு முன்பாக தென்பகுதி கட்சிகளின் இணக்கப்பாட்டைப் பெற வேண்டும். விடுதலைப்புலிகளின் தலைவர் கூட இதனை வலியுறுத்தியுள்ளார். அந்த வகையில் ஒற்றையாட்சியின்கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எமது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றார் மங்கள சமரவீர.

# வர்த்தகத்துறையைக் கட்டியெழுப்ப சிறிலங்கா அரசு தவறிவிட்டது

*– வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனம் குற்றச்சாட்டு*

(கொழும்பு)

கடந்த வருடம் டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகத்துறையைக் கட்டியெழுப்ப அரசாங்கம் தவறியுள்ளதாக வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் குற்றம்சுமத்தியுள்ளது.

இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ளதாக அதன் தலைவர் ரஜாப்படீன் தெரிவித்தார். சிறிய மற்றும் மத்தியதர கைதொழில்களை கட்டியெழுப்ப அரசாங்கம் தனியார் துறையினறை ஊக்குவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (32)

# நான்கு இலட்சம் குடும்பங்களின் சமுர்த்தி நிவாரணம் நிறுத்தம்!

(கொழும்பு)

வசதி படைத்த சுமார் நான்கு இலட்சம் குடும்பங்களுக்கு எதிர்வரும் சனவரி மாதம் ஐந்தாம் திகதியுடன் சமுர்த்தி நிவாரணம் வழங்குதலை நிறுத்த சமுர்த்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போதைய சமுர்த்தி நிவாரணம் பெறும் 20 இலட்சம் பேரில் 20 வீதமானவர்கள் இந்த நிவாரணங்களைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் என்று சமுர்த்தி விவகார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஐந்தாம் திகதிக்குள் தகுதியற்றவர்கள் தங்களின் சமுர்த்தி பெறுவதற்கான அட்டைகளைக் கொண்டு வந்துதர வேண்டும் என்றும், ஐந்தாம் திகதியின் பின்னர் ஆய்வு நடாத்தி அவர்கள் அனைவரையும் சமுர்த்தித் திட்டத்திலிருந்து நீக்கிவிடுவதுடன் அவர்களுக்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுயவிருப்பத்தின் பேரில் அட்டைகளைத் திருப்பி வழங்குவோருக்கு வருடாந்தம் வழங்கப்படும் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவும், குழந்தை பிறப்பு மற்றும் திருமணங்களின்போது வழங்கப்படும் 5,000 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களே அண்மைய மோசமான நிலைமைக்குக் காரணம்

## –இணைத்தலைமை நாடுகள் தெரிவிப்பு

சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களின் செயற்பாடுகள்தான் அண்மைய மோசமான நிலைமைகளுக்குக் காரணம் என்பதை ஏற்றுக்கொள்வதாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அறிவித்துள்ளது. பெல்ஜியத் தலைநகர் பிரசெல்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; இலங்கையினது நிலைமைகள் தொடர்பாக டிசம்பர் 19 ஆம் திகதி பிரசெல்சில் இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் ஆராய்ந்தது. இணைத்தலைமை நாடுகளுடன் இந்திய அரச பிரதிநிதி தனியே சந்தித்து தமது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். இலங்கையில் உள்ள மக்கள் அமைதியை விரும்பு கின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்திருந்த, "அர்த்தமுள்ள அரசியல் தீர்வுத் திட்டம்" என்ற கோரிக்கை தொடர்பிலும் இணைத்தலைமை நாடுகள் விவாதித்தது. இருப்பினும் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை வடக்கு-கிழக்கில் புறக்கணிக்குமாறு விடுதலைப் புலிகள் செய்தமைக்கு கண்டனம் தெரிவிக்கிறோம்.

வடக்கு-கிழக்கில் அண்மையில் அதிகரித்துள்ள வன்முறைகளுக்கு நாம் கண்டனம் தெரிவிக்கிறோம். அதிகரித்திருக்கும் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தங்களுக்கு உள்ள உள்ளார்ந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துமாறு விடுதலைப் புலிகளை கேட்டுக்கொள்கிறோம். அண்மைய மோசமான சூழ்நிலைகளுக்கு சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களும் காரணம் என்பதை இணைத்தலைமை நாடுகள் ஏற்றுகொள்கிறது. சிறிலங்கா அரசாங்கமும் இத்தகைய குழுக்களினது செயற்பாட்டை முடிவுக்கு கொண்டு வந்து யுத்த நிறுத்த உடன்பாட்டை முன்னெடுத்துச் செல்வதில் தங்களுக்குள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்த வேண்டும். யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செயற்படுத்துவது தொடர்பான உடனடிப் பேச்சுக்கள் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற வேண்டும் என்பதை இணைத்தலைமை நாடுகள் வரவேற்கிறது.

இது தொடர்பிலான ஜப்பானின் விருப்பத்தையும் நாம் வரவேற்கிறோம். இனியும் தாமதிக்காமல் இருதரப்பினரும் இது தொடர்பிலான பேச்சுக்களை உடனே தொடங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். அமைதிப் பேச்சுகளை முன்னெடுக்க தென்னிலங்கைக் கட்சிகளினது இணக்கப்பாட்டை உருவாக்க சிறிலங்கா சனாதிபதிமேற்கொள்கிற முயற்சிகளை வரவேற்கிறோம். தென்னிலங்கை கட்சிகள் நெகிழ்வுத் தன்மையுடன் இது விடயத்தில் செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறோம் எனத்தெரிவிக் கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரியில் கைக்குண்டு வீச்சு இரு இராணுவத்தினர் காயம்

## – மக்களைநோக்கிப் படையினர் சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு முன்பாக நிலைகொண்டுள்ள இராணுவம் மீது நேற்று மாலை 3.00 மணியளவில் இனம்தெரியாத நபர்களால் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது.

இதில் இருஇராணுவத்தினர் காயமடைந்தனர். இக்கைக்குண்டு வீச்சைத் தொடர்ந்து இராணுவம் வீதியை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்ததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் சாவகச்சேரிநகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் குவிக்கப்பட்ட இராணுவம் வீதியால் சென்றவர்களை எல்லாம் தாக்கியது. இதனால் நகரை விட்டு மக்கள் ஓடினர். நகரக்கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டதுடன் சாவகச்சேரி ஊடான ஏ-9 சாலையின் போக்குவரத்தும் சிலமணி நேரம் துண்டிக்கப்பட்டது. (33)

# விளக்கமறியல் நீடிப்பு

மூன்று சிறிலங்காப்பொலிசாரால் எதிர்வரும் மூன்றாம் நாள்வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மன்னாரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் அனுமதியின்றி உள்நுழைந்தார்கள் எனக் கைது செய்யப்பட்ட மூன்று சிறி லங்காப் பொலிசார் மீதான விசாரணை கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றில் நேற்று இடம்பெற்றதைத் தொடர்ந்தே இவ் உத்தரவு நீதிமன்றால் விடுக்கப்பட்டது.

# சப்பாத்துக்கால்களாலும் பொல்லுகளாலும் 20 இற்கும் மேற்பட்டோர் என்னைத் தாக்கினர்

## –சிரேஷ்ட விரிவுரையாளர் மா. இளம்பிறையன்

(யாழ்ப்பாணம்)

நிலத்தில் கிடந்த என்னை இருபதிற்கும் மேற்பட்ட பொலிசார் பல்கலைக்கழக வளாகத்தினுள் வைத்து என்னைச் சப்பாத்துக்கால்களினாலும் பொல்லுகளினாலும் தாக்கினார்கள்.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வித் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் மா.இளம்பிறையன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலை 24ஆம் விடுதியில் தோள் மூட்டு எலும்பு வெடித்த நிலையில் இவர் கோப்பாய் பொலிசாரினால் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்றைய நிகழ்வு பற்றிக் கூறும்போது, நண்பகல் 11.30 மணியளவில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கோப்பாய் பொலிசார் ஆயுதங்களுடன் வந்து இறங்கினார்கல். பல்கலைக் கழக வளாகத்தினுள் மாணவர்கள் நின்றார்கள்.

சில நிமிடநேரத்தில் மேலும் பொலிசார் பெருமளவில் அப் பகுதியில் குவிக்கப்பட்டனர். சில நிமிடநேரத்தில் பல்கலைக்கழக வளாகத்தினுள் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதுடன் கண்ணீர்ப் புகைக்குண்டுகளும் வீசப்பட்டன.

நான் உடன் நிலத்தில் வீழ்ந்து படுத்தேன். அப்போது 30 இற்கும் மேற்பட்ட பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவண்ணம் உள்ளே வந்தார்கள்.

அவர்கள் என்னை நோக்கியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே நான் எழுந்து ஓடினேன். அப்போது தொடர்ச்சியாக என்னை நோக்கியும் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெறவே நான் மீண்டும் நிலத்தில் வீழ்ந்து படுத்தேன்.

அவர்கள் என்னைச் சுற்றி வளைத்தும் சிங்களத்தில் நான் பல்கலைக்கழக விரிவுரையாளர் எனக் கூறினேன். அப்போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் புலிகள். உங்களால் தான் பிரச்சினை வருகின்றது எனக்கூறி 20 இற்கும் மேற்பட்ட பொலிசார் சப்பாத்துக் காலினாலும், பொல்லுகள்,துப்பாக்கிப் பிடிகளாலும் தாக்கினார்கள்.

நான் மயக்கம் அடையும் நிலையில் என்னை நிலத்தில் இழுத்துச் சென்று தமது வாகனத்தில் ஏற்றி கால்களின் கீழ்போட்டு உழக்கி வைத்திருந்தார்கள்.

பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இருக்கும் போதே நான்மீண்டும் தாக்கப்பட்டேன். அதன் பின்னர் என்னுடன் கதைத்து விட்டு மன்னிப்புக் கேட்டு விடுதலை செய்தார்கள் எனவும் தெரிவித்தார். (41)

# நடமாடும் சேவை

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தினால்

நாளை ஊற்றுப்புலம், புதுமுறிப்பு, சேலைநகர் கிராம மக்களுக்கான காணிசம்பந்தமான நடவடிக்கைகள் புதுமுறிப்பு பொது மண்டபத்தில் வைத்தும், நாளை மறுதினம் ஜெயந்திநகர் கிராம மக்களுக்கான காணி சம்பந்தமான நடவடிக்கைகள் ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்தும் நடைபெறவுள்ளதென கரைச்சிப் பிரதேச காணி உத்தியோகத்தர் செ.சிறிரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

### பாராளுமன்றில்..

மேற்பட்ட மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர். மக்கள் வாழ்கிற இடங்களில் இருந்து அனைத்து அரச படைகளையும் சிறிலங்கா அரசாங்கம் உடனே விலக்கிக் கொள்ள வேண்டும். யாழ். சிறிலங்கா இராணுவத் தளபதி உடனடியாக நீக்கப்பட்டு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இதையடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்கள் சபையின் மையப்பகுதிக்கு வந்து சிறிலங்கா இராணுவ வன்முறைகளைக் கண்டித்து முழக்கம் எழுப்பினர். இதனால் ஒட்டுமொத்த சபை நடவடிக்கைகளும் முடங்கின. பின்னர் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

### ஆட்டோ..

ஓட்டுனர்களையும் துரத்தித் துரத்தித் தாக்கியதுடன் மக்களையும், பயணிகளையும் இராணுவம் தாக்கியது.

இந்தச் சம்பவத்தால் யாழ்.நகரத்தின் பிரதான வீதிகளில் மக்களும் ஆட்டோக்காரர்களும் அலறி அடித்துக்கொண்டு சிதறி ஓடினர். வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன. அனேக வீதிகளில் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. இதனால் நகரம் வெறிசோடியது.

நகரவீதிகளில் எல்லாம் இராணுவம் குவிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டதால் நகரில் பதற்றம் ஏற்பட்டது. இயல்பு நிலை முற்றாக பாதிப்படைந்தது.

இதேவேளை சம்பவ இடத்திற்கு வந்த கண்காணிப்புக்குழு இராணுவ அட்டகாசங்கள் அதிகரித்திருந்ததால் விசாரணை நடத்தாமலேயே திரும்பிச் சென்றது. (33)

### போர் நிறுத்த..

த்தனமான தாக்குதல்களுக்கு உள்ளாகியதைக் கண்டிக்கும் முகமாக இந்த மறியற் போராட்டம் இடம் பெற்றது.

மறியற் போராட்டத்தைத் தொடர்ந்து போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பொறுப்பதிகாரியிடம் ஊடகவியலாளர்கள் சார்பில் மகஜர் ஒன்றும் வழங்கப் பட்டுள்ளது. (41)

### யாழ்...

டன் உள்நுழைந்த பொலிசார், பல்கலைக்கழக காவலரை மீறி எமது விரிவுரையாளர் ஒருவரையும் மாணவர் ஒருவரையும் இழுத்துச் சென்றுள்ளனர். அத்துடன் உள் நுழைந்த பொலிசாரும் மாணவர்கள் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இது சட்டத்திற்கு முரணானது என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வாகள்.

ஆகவே மாணவர் கற்கக்கூடிய சரியான சூழல் தோன்றும்வரை எமது கற்றல் செயற்பாடுகள் அனைத்தையும் இடைநிறுத்தி எமது அடுத்தகட்ட செயற்பாடுகளை நாம் ஆரம்பித்துள்ளோம் என்பதனை அறியத்தருகின்றோம் என நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (28)

### சமாதானத்தின்..

இளம்பரிதி ஏற்பட்டுள்ள நிலவரங்கள் பற்றி விளக்குகையில்;

போர்நிறுத்த உடன்படிக்கை செம்மையாக கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதில் தமிழீழ விடுதலைப்புலிகள் உறுதியாகவுள்ளனர். ஆனால் சிறிலங்காப் படைத்தரப்பு அண்மைக்காலமாக போர்நிறுத்த உடன்படிக்கையைப் புறக்கணித்து அத்துமீறல்களில் ஈடுபடுகின்றது. பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்படுகின்றார்கள். அப்பாவிப் பொது மக்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு அவமானப்படுத்தப் படுகின்றார்கள். மக்களால் புனிதமாகக் கருதப்படுகின்ற மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் சென்று சோதனையிடுகின்றார்கள். நாகரீக வரம்பைமீறி தனியார் வீடுகளில் தேடுதல்கள் என மனித உரிமைகளையும், போர்நிறுத்த உடன்படிக்கையையும் உதாசீனப்படுத்தி படைத்தரப்பினர் நடந்து கொள்கின்றார்கள் என்றும் இத்தகைய அத்துமீறல்கள் படையினரது உணர்ச்சி வசப்படுதலின் வெளிப்பாடுகள் எனக்கருதமுடியாது மாறாக இவை முன்னரேயே இராணுவ உயர்பீடத்தினால் நன்கு திட்டமிடப்பட்டு அச்சுறுத்தி ஒடுக்கும் வன்முறைகளாகும் எனவும் இத்தகைய மீறல்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் அனைத்துலகத்தின் கவனத்திற்கும் வெளிப்படுத்தப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

போர்நிறுத்தக் கண்காணிப்பாளர் யெண் தெரிவிக்கையில்;

கடந்தசில நாட்களாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் குறித்து கூர்ந்து கவனிப்பதாகவும் இது விடயத்தை தமது உயர்பீடத்தின் கவனத்தில் கொண்டு வந்துள்ளதாகவும், போர்நிறுத்த உடன்படிக்கைக்கு ஊறு ஏற்படுத்தப்படமாட்டாது என தாம்நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (கு,தீ)

### வீதிமறியல்..

மாணவர்களது இப்போராட்டத்தினால் மேற்படி வீதிவழியான இராணுவப்போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டதையடுத்து அங்கு வந்த இராணுவம் மாணவர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டுப் பிரயோகம் துப்பாக்கிச்சூடு, குண்டான் தடியடி என்பவற்றைமேற்கொண்டு விரட்டியடித்தனர்.

இதில் பத்திற்கும் அதிகமான மாணவர்கள் காயமடைந்தனர். இது மட்டுமன்றி சம்பவஇடத்தில் இராணுவம் குவிக்கப்பட்டதால் இங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதேவேளை யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களுக்கும் படையினருக்கும் இடையே நேற்று மாலை நான்கு மணியளவில் முறுகல்நிலை ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. பரீட்சை முடிந்து மாணவர்கள் வெளியே வந்த பின்னர் விளையாட மைதானம் சென்ற மாணவர்களுக்கும் ஈருருளியில் வந்த படையினருக்கும் இடையே ஏற்பட்ட முறுகல்நிலையைத் தொடர்ந்து படையினர் மாணவர்களை தாக்க முற்பட்டவேளை மாணவர்கள் படையினர்மீது கல்வீசி தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது. (28,33,41)

### இராணுவம்..

மாணவரின் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலை நடாத்தியதோடு, பொல்லுகளாலும் தாக்கத் தொடங்கினர்.

இத்தாக்குதல் சம்பவத்தின்போது, உடற்கல்வி சிரேஷ்ட விரிவுரையாளர் இளம்பிறையும், இருமாணவர்களும் படுமோசமானமுறையில் தாக்கப்பட்டதோடு, பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை விரிவுரையாளரையும், மாணவர்களையும் கைதுசெய்துகொண்டு செல்லப் பொலிசார் முற்பட்டபோது மாணவர்கள் இதனைத்தடுக்க முற்பட்டவேளை பின்னரும் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட விரிவுரையாளரும், மாணவர்களும் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டும் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும், பின்னர் விரிவுரையாளர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இராணுவத்தினரினதும் பொலிசாரினதும் இக்கண்மூடித்தனமான நடவடிக்கை காரணமாக நேற்று மூன்றாவது நாளாகவும் பல்கலைக்கழகப் பகுதியில் பதற்றம் நிலவியதாகவும், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டு பதற்றம் நிலவியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (41, 28)




# காணவில்லை

குருநாகலில் வசித்து வந்த எ.மரியமலர் என்பவரை 16.11.2005அன்று தொடக்கம் காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P 0776184745

யூட் எட்வேட் என்பவருடன் தொடர்பு கொள்ளவும்.

(7162)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.